# லண்டன் முர

Vol 5 LONDON MURASU 15th JUNE 1974 No. 3.



கனேடிய நாடாளுமன்றம்



## ENTERPRISES Ltd.

**ERSTETH ROAD, LONDON S.W.17**



**SPECIAL FLIGHTS TO SRI LANKA**

ALSO ECONOMY FLIGHTS TO SINGAPORE MALAYSIA, BANGKOK and TOKYO.

*fares now Slashed*

DEPARTURES from LONDON - HEATHROW

22nd and 26th MAY ; 17th, 21st and 28th JULY

8th, 11th, 15th, 18th, 22nd and 29th DECEMBER.

**return minimum 14 days & maximum 6 weeks**

**BOOK NOW!**

**Limited vacancies**

CONTACT DAY OR NIGHT: K.C. RAJASINGHAM 01-672-0579
D. ANDREE 01-961-0680

---

## GAMIT INTERNATIONAL AIR SERVICES

38, BROADWATER ROAD, LONDON, SW17 0DT

**SPECIAL flights to Ceylon**

| | 9th MAY to 26th JUNE | 3rd JULY to 11th DEC. |
|---|---|---|
| DEPARTURES from LONDON - WEDNESDAYS<br>" " COLOMBO - FRIDAYS | ADULT £165<br>CHILD 2-12 yrs. £99 | ADULT £180<br>CHILD 2-12 yrs. £99 |

**also other cheap flights to Ceylon**

Contact
GAMIT AMERESEKERE - 767-0644 } EVENINGS & WEEKENDS
RANJIT AMERESEKERE 767-0611 }
10 A.M. - 6 P.M. 764-4519

# லண்டன் முரசு

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை
-பாரதிதாசன்.


ஆசிரியர்.

ச.ம.சதானந்தன் B.Sc.(Econ.)(Lond.)

சிறப்பாசிரியர்.

திருமதி சாரதா நம்பி ஆரூரன் M.A.

உதவி ஆசிரியர்.

ஜே.வீ.ஆனந்தராஜா

ஓவியர்கள்.

கோ.ஜம்பு, பக்கீர் M.Sc.(Lond.)

நிருபர்கள்.

லண்டன் சி.சிவசோதி, க.ஜெகதீஸ்வரன், ஜெ.சிவாஜி B.Sc.(Eng),
மீ.சுப்பாராஜ், எம்.டி.விஜயேந்திரன், அ.கோகுலன்.

தமிழ்நாடு டி.செல்வராஜன்(சென்னை), ஆ.ஞானசேகரன் M.Sc(மதுரை)

கேரளம் எஸ்.எஸ்.மணி B.com. பிரான்சு செய்யது மௌலானு

மைசூர் ஆர்.கண்ணன் B.A., B.O.L. மலேசியா பொ.பாலகோபால் B.A., B.L.

மொரிஷியஸ் எம்.தங்கமுத்து கனடா கே.வெங்கட்ராமன்

அயர்லாந்து ஸ்ரீ.வேங்கடேசன் B.Sc., A.I.C. மான்செஸ்டர் ஆர்.எல்.சிவம்

முரசு 5 ஆனி தி ஆ 2005, ஜூன் 15, 1974 ஒலி 3







| | | | |
|---|---|---|---|
| ஆசிரியருரை | 2 | நிழற்படத்தில் செய்திகள் | 16 |
| தாய்நாடுகளின் செய்திகள் | 3 | கணக்குத் தீர்ந்தது | 19 |
| சிதறிய செய்திகள் | 5 | தேயிலைத் தோட்டங்களில்... | 21 |
| அணுயுகத்தில் இந்தியா | 7 | வெளிநாடுகளில் தமிழ் | 24 |
| நம்மைச்சுற்றிய உலகம் | 9 | அன்புள்ள ஆசிரியருக்கு | 26 |
| மேற்குநாடுகளின் செய்திகள் | 11 | FINAL EXAMS | 28 |
| முன்னேறும் அறிவியலில் | 13 | NEWSGRAM | 30 |
| திருக்குறள் | 14 | NEWS IN BRIEF | 31 |
| சிறப்புநாட்குறிப்பு | 14 | CLASSIFIED ADVERTS | 32 |





மேற்த நாடுகளின் முதன்முதல் தமிழ்த் திங்கள் ஏடு. இலாப நோக்கின்றி நடத்தப்படும் பிரசுரம். லண்டன் முரசு பிரசுரத்தால் வெளியிடப்பட்டது.

# தெஸ்தேங்கின் பொறுப்பு...

பிரான்சு நாட்டின் புதிய குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார் திரு வலேரி ஜிஸ்கார் தெஸ்தெங் அவர்கள். முன்னாள் பிரஞ்சுக் குடியரசுத் தலைவர் திரு போம்பிது அவர்கள் கடந்த மாதம் அமரத்துவம் அடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரஞ்சுத் தேர்தல் உலகின் முழுக் கவனத்தையும் ஈர்த்திருந்தது.

குடியரசுத் தேர்தலுக்கு நின்றவர்கள் மொத்தம் 12 பேர். முதல் சுற்றில் ஒருவருக்கும் அதிகப்படியான வாக்குகள் கிடைக்கவில்லை. இரண்டு பேர் மட்டுமே மிஞ்சினார்கள். இடது சாரிக் கட்சிகளின் மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிட்ட திரு பிரான்கோயிஸ் மித்தரான் 43.5% வாக்குகளைப் பெற்றார். வலது சாரிக் கட்சிகளின் ஆதரவைப் பெற்ற சுதந்திரக் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த திரு வலேரி ஜிஸ்கார் தெஸ்தெங் 33% வாக்குகளைப் பெற்றார். ஆனால் இரண்டாவது சுற்றில் திரு வலேரி ஜிஸ்கார் தெஸ்தெங் மிகச் சிறிய வாக்கு வித்தியாசத்தால் 1.4% வெற்றி பெற்றுள்ளார்.

இதுவரை காலமும் கண்டிராத வகையில் மேற்கு நாடுகளின் முக்கிய வலதுசாரி நாடான பிரான்சு ஏறக்குறைய பாதி வாக்குகள் கம்யூனிஸ்டு ஆதரவுள்ள இடது சாரி முன்னணிக்குப் போகுமளவிற்கான நிலைக்கு வந்துள்ளது. எது எப்படி இருப்பினும் பண வீக்கத்தாலும், விலைவாசி உயர்வுகளினாலும் பலவழிகளால் பாதிக்கப்பட்டுள்ள பிரஞ்சு நாட்டு, பொருளாதார நிலையைத் தீர்த்து இங்கு நிலவி வரும் சமூகப் பிரச்சனைகளுக்கு விடை காணுதல் புதிய தலைவர் வலேரி தெஸ்தேங்கின் மிக முக்கிய பொறுப்பாகியுள்ளது. பிரஞ்சு நாட்டு மக்கள் புதிய விழிப்புணர்ச்சி பெற்று விட்டார்கள் என்றால் அதன் அர்த்தம் என்ன? புதிய தலைவர் தெஸ்தேங்கே இதற்கெல்லாம் விடை காணுதல் வேண்டும்.

# சிவகுமாருக்கு அஞ்சலி...

தனது நாடும் மக்களும் விடுதலை பெற்று வாழவேண்டும் எனப் போராடிய தமிழ் இளைஞர் பொன்னுத்துரை சிவகுமார் காவலரிடம் கைப்பற்றப்பட்டதும் தனது உயிரையே எடுத்துக் கொண்டார். ஈழத் தமிழகம் தான் பெற்றெடுத்த வீரத் திருமகன் ஒருவரை இன்று இழந்து கண்ணீரும் கம்பலையுமாக இருக்கின்றது.

"நோய் நொடியால் மாண்டவர்கள் கோடி கோடி
நூற்றிலொரு பெயர் தானும் ஏட்டில் இல்லை
தாய்நாடு வாழ்கவென மடிந்த வீரர்
சரித்திரத்தில் பொன்னெழுத்தாய் நிலைத்து நிற்பர்."

"தன்னலம் சிறிதுமின்றி நெஞ்சுறுதியுடன் தமிழ் இனத்துக்கு தன்னை அர்ப்பணித்த ஒரு உத்தம தொண்டன் சிவகுமாரன். அகிம்சை மார்க்கத்தில் நம்பிக்கை கொண்ட எம்போன்றோர் அவரது வழியை ஏற்றுக்கொள்ளா விட்டாலும், அவரது உண்மையான தொண்டையும் தியாகத்தையும் மனமாரப் பாராட்டி, மதிப்பிட முடியாத அவரது வீரத்தின் முன் தலை வணங்கி நிற்கின்றோம்" என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு அமிர்தலிங்கம் தனது இறுதி அஞ்சலியின் போது கூறினார்.

சிவகுமார் போன்ற பல்லாயிரக் கணக்கான தமிழ் இளைஞர்கள் ஈழத்தில் தோன்றி வரும் இவ்வேளையிலாவது இலங்கை அரசு கண் விழித்து தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டுமென்று தமிழுலகம் எதிர் பார்க்கின்றது.

# தாய் நாடுகளின் செய்திகள்

## ஈழத்தமிழகத்தின் பகத் சிங் சிவகுமாருக்கு மக்கள் இறுதி அஞ்சலி

### போலீசார் கைது செய்ததும் தன்னைத்தானே தற்கொலை செய்தார்

இலங்கைப் போலீசாரால் தேடப்பட்டு வந்த தமிழ் மாணவர் பேரவையின் தலைவர்களுள் ஒருவரான பொன்னுத்துரை சிவகுமார் இம்மாதம் 5ந் தேதியன்று போலீசாரால் கைது செய்யப்பட்டபோது தன்னைத் தானே தற்கொலை செய்துகொண்டார். 23வயதான திரு சிவகுமார் ஈழத்தமிழகத்தின் விடுதலைக்கான போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக போலீசாரால் தேடப்பட்டு வந்தார். சிவகுமார் மறைவு குறித்து தமிழ் மாநிலம் முழுவதும் இரு நாட்களாக துக்கம் அனுட்டிக்கப்பட்டது. ஜூன் 6,7ந் தேதிகளில் கடைகள், திரைப் பட மாளிகைகள், கல்லூரிகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன. சிவகுமாரின் இறுதிச் சடங்குகள் 7 6 74 அன்று அவரது பிறந்த ஊரான உரும்பிராயில் நடைபெற்ற போது 50,000க்கும் அதிகமான மக்கள் கலந்து இறுதி அஞ்சலி செலுத்தினர்கள்.

தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமைப்பட வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டு இயங்கிய திரு சிவ குமார் தீண்டாமை ஒழிப்பை தனது ஊரிலேயே நிலைநாட்டும்பொருட்டு சம சந்தி போசனம் நடத்தியவர். ஈழத் தமிழகத்தின் விடுதலைக்கான வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக இரு முறை சந்தேகத்தில் கைதாகி முறையே 6 மாதங்களும், ஒன்றரை வருடங்களும் சிறையில் வைத்து விடுவிக்கப்பட்டவர். தமிழன் என்றும் சுதந்திரமாக தன் மானத்துடன் வாழவேண்டும் என்பதும், தமிழர்கள் தமிழிலேயே தம் கருமங்களை ஆற்ற வேண்டும் — தமிழிலேயே பேச வேண்டும் என்பதும் இவருடைய இலட்சியங்களாக இருந்தன.

## டி ஏ மதுரம் காலமானார்

தமிழ்ப் படவுலகின் பிரபல ஹாஸ்ய நட்சத்திரமாக விளங்கிய டி ஏ மதுரம் காலமானார். அவருக்கு வயது 56. காலஞ்சென்ற கலைவாணர் என் எஸ் கிருஷ்ணனின் துணைவியாரான இவர் 150 படங்களுக்கு மேல் நடித்துள்ளார். 1962ல் சங்கீத நாடக அகாடமியின் விருது இவருக்கு அளிக்கப்பட்டது. இறுதி ஊர்வலத்தில் பல கலைஞர்களும் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

## சத்தியவாணி முத்துவின் புதிய கட்சி ஆரம்பம்

முன்னாள் தமிழக அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம் என்னும் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளார். புதிய கட்சியின் தலைவராக முன்னாள் எம் பி திரு சிவசங்கரன் அவர்களும் பொதுச் செயலாளராக திருமதி சத்தியவாணி முத்து அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தனது புதிய கட்சி தாழ்த்தப்பட்ட மக்களின் சமுதாய, அரசியல் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் என திருமதி சத்தியவாணி முத்து அறிவித்துள்ளார்.

## பின்னி நெசவாலையில் பயங்கரத் தீ

சென்னை, பெரம்பூரிலுள்ள பின்னி நெசவாலையில் ஜூன் 1ந் தேதியன்று ஏற்பட்ட தீ விபத்தில் ரூ 75 லட்சம் மதிப்புள்ள பஞ்சுப் பொதிகள் கருகி நாசமாகின. எரிந்த பஞ்சில் பெரும்பாலானவை இறக்குமதி செய்யப்பட்டவையாம். மில் தீயணைப்புத் துறையினருடன், 16 தீயணைப்புத்துறையினர் தீவிரமாகப் போராடி தீயைக் கட்டுப்படுத்தினர். இ பி கோ 436வது பிரிவின் கீழ் வேட்டு வைத்து விடமம் செய்வது போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனராம்.

## தமிழ்நாடு நகரசபைத் தேர்தல்கள் ஒத்திவைப்பு

அடுத்த மாதம் தமிழ் நாட்டில் நடைபெறவிருந்த நகர சபைத் தேர்தல்களை ஒத்திவைத்துள்ளது தமிழக அரசு. அதற்கான அவசரச் சட்டம் ஒன்றை தமிழக ஆளுனர் கே கே ஷா பிறப்பித்துள்ளார். புதிய முறை வாக்குச் சீட்டுக்களைப் பயன்படுத்த உத்தேசித்திருப்பதால் தாமதம் ஏற்பட்டிருப்பதாக அவசரச் சட்டம் கூறுகின்றது.

## சென்னையில் இஸ்லாமிய இலக்கிய மாநாடு

சென்னையில் நியூ காலேஜில் இரண்டாவது இஸ்லாமியத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றது. மாநாட்டை நீதிபதி திரு எம் எம் இஸ்மாயில் ஆரம்பித்து வைத்தார். கிறிஸ்துவ இலக்கிய சங்கத்தின் மாதிரியில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய சங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று அவர் தனது உரையில் தெரிவித்தார். இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக்காகப் பல்கலைக் கழகத்தில் துறை ஒன்றை ஏற்படுத்த முதல் தொகையாக ரூ10,000 அளிப்பதாக முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்தார். மாநாட்டில் இஸ்லாமிய இலக்கியக் கழகத்தால் பிரசுரிக்கப்பட்ட 8 நூல்கள் வெளியிடப்பட்டன.

## தமிழகத்தில் தமிழருக்கே வேலை

தமிழ் நாட்டிலுள்ள தொழிற்சாலைகளிலும், வர்த்தக நிறுவனங்களிலும் பெரும்பாலும் தமிழர்களுக்கே வேலை அளிக்கப்பட வேண்டும் என தமிழக அரசு சட்டம் கொண்டு வரவுள்ளது. இதுபற்றி அறிக்கை வெளியிட்டுள்ள தொழில் அமைச்சர் மாதவன் அவர்கள் இந்தச் சட்டம் பின்பற்றப்படுகின்றதா? இல்லையா? என்பதை தொழிற்சாலைகளிலும் வர்த்தக நிறுவனங்களிலும் வேலை செய்பவர்களே கண்காணித்து வரலாம் என்றார். உள்ளூர்காரர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் அளிக்கவேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருவதைத் தொடர்ந்தே இந்த முடிவை எடுத்துள்ளது தமிழக அரசு.

## பட்நாயக் -- கருணாநிதி சந்திப்பு

இந்திய லோக சபையின் ஏழு எதிர்க்கட்சிகளின் தலைவரான திரு பட்நாயக் தமிழக முதல்வர் திரு கருணாநிதியை சென்னையில் சந்தித்துப் பேசினார். நீண்ட நேரமாக இவர்கள் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது இந்திய அரசியல் விவகாரங்கள் பற்றியும், மாநில சுயாட்சி குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

## இலங்கை அமைச்சர்களைக் கொல்ல முயற்சி!

இலங்கையின் முக்கிய அமைச்சர்களான திருவாளர்கள் இலங்கரத்ன, கொபேக்கடுவ ஆகிய இருவரையும் கொல்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டதை இலங்கையின் போலீஸ் இலாகா கண்டுபிடித்துள்ளது இந்தக் கொலை முயற்சி எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை (யூ என் பி) ச் சேர்ந்தோரே திட்டமிட்டனர் எனவும் இவர்கள் சந்தேகப்படுகின்றனராம்.

## மூளைசாலிகள் வெளியேற்றம் பற்றி இலங்கை அரசு கவலை

இலங்கையிலிருந்து பெருமளவில் வெளியேறிக்கொண்டிருக்கும் மூளைசாலிகள் பற்றி இலங்கை அரசு கவலை கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இதுபற்றி ஆராய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவையின் உப குழு ஏராளமான மூளைசாலிகள் நாட்டைவிட்டு வெளியேறினும் நாட்டிற்கு தற்காலிகமாக கஷ்டங்கள் ஏற்படமாட்டாது எனவும் தெரிவித்துள்ளது. இது பற்றி அந்தக்குழு கீழ்க்காணும் தகவலை வெளியிட்டுள்ளது: 1. இலங்கையிலிருந்து தேர்ச்சிபெற்ற கணக்காளர்களில் (ACCOUNTANTS) 33 வீதத்தினர் வெளிநாடுகளுக்குச் சென்றவண்ணம் உள்ளனர். இவர்கள் முக்கியமாகப் போவது சாம்பியா போன்ற ஆபிரிக்க நாடுகளுக்கே. 2. கடந்த மூன்றாண்டுகளில் 450 மருத்துவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனராம். உயர்பிரிவு தேர்வுகளில் சித்தியடைந்த மருத்துவர்களுக்கு உயர்பிரிவு உத்தியோகங்கள் கொடுக்கப்படாமையாலே இவர்கள் வெளிநாடுகள் செல்கின்றனராம். 3. உள்நாட்டில் வேலைவாய்ப்பில்லாமையால் பல பொறியியலாளர்கள் வெளிநாடுகள் சென்றவண்ணம் இருக்கின்றார்கள். இந்தப் பிரச்சனைகளை ஆராய்ந்த அமைச்சரவை தற்காலிகமாக எதுவித நடவடிக்கையும் எடுப்பதில்லையென முடிவு செய்துள்ளது.

## இலங்கை அந்நிய செலாவணி குற்றவியல் வழக்கு முடிவுகள்

இலங்கை குற்றவியல் நீதிமன்றத்தில் அந்நிய செலாவணி கடத்தல் சம்பந்தமான வழக்கின் முடிவில் அகமது முபாரக் தாஹா என்பவருக்கு 7 வருடக் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது. கூடவே ரூ750,000 அபராதமும் விதிக்கப்பட்டது. ராஜா ரத்தினகோபால் என்னும் பிரித்தானியப் பிரஜைக்கு 2 வருடக் கடுங்காவல் தண்டனையும் ரூ664,251 அபராதமும் விதிக்கப்பட்டது. ஜார்ஜ் அபயரத்தின என்னும் வழக்கறிஞருக்கு ரூ20000 அபராதம் விதிக்கப்பட்டது. நீதிமன்றத்தில் சமுகமளிக்காத லண்டன்வாசியான கிங்ஸ்லி ஜாக்சன் என்பவருக்கு 5வருட கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

## ரயில்வே வேலைநிறுத்தம் முடிவடைந்தது

இருபது நாட்களாக இந்திய உப கண்டம் முழுவதும் நடைபெற்ற ரயில்வே வேலைநிறுத்தம் முடிவடைவடைந்தது. தற்போது நிலவி வரும் சூழ்நிலைகளையும் பொருளாதார விளைவுகளையும் முன்னிட்டு வேலைநிறுத்தத்தைக் கைவிடுவதாக ரயில்வே வேலைநிறுத்தக்குழு முடிவுசெய்துள்ளது. இந்த வேலைநிறுத்தத்தின் விளைவாக ரூ500 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளதாம். தமிழ்நாட்டில் மட்டுமே இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி 2,000 ரயில்வே தொழிலாளர்கள் இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டனராம்.


## லண்டன் முரசு பிரசுர தமிழ் நூல் விற்பனை

தமிழ் நாட்டிலிருந்து தலைசிறந்த எழுத்தாளர்களால் எழுதப்பட்ட தரம் மிகுந்த இலக்கிய நூல்கள், சமூக நாவல்கள், சமையல் — குடும்பக் கலை நூல்கள் இவற்றை இறக்குமதி செய்துள்ளது லண்டன் முரசு பிரசுரம். இந்நூல்கள் அஞ்சல் முறை மூலம் (MAIL ORDER SALES) மட்டுமே விற்பனை செய்யப்படும். விற்பனை செய்யும் நாடுகள் — பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, கனடா. விபரங்களுக்கு விளம்பரத் தாள்களைப் பாருங்கள். முதல் கப்பலில் இறக்குமதி செய்யப்பட்ட நூல்கள் முடியுமுன்னர் பெறுவதற்கு உடனடியாகவே விண்ணப்பியுங்கள்!

"LONDON MURASU"
8 ASHEN GROVE
LONDON S.W.19.

# சிதறிய செய்திகள்

✲ ✲ பாண்டிச்சேரி மாநிலத்தில் நிறுவப்படவிருக்கும் மத்திய பல்கலைக் கழகம் அடுத்த ஆண்டு முதல் செயல்பட ஆரம்பிக்கும்.

✲ ✲ இந்தியாவிலேயே அரிசி உற்பத்தியில் தமிழ்நாடு முதல் இடத்தை வகிக்கிறது! 1960க்கும் 1970க்கும் இடையில் தமிழகத்தின் அரிசி உற்பத்தி 32.84 சத விகிதமாக உயர்ந்துள்ளது.

✲ ✲ இந்திய — இலங்கை பொருளாதார கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் இலங்கை தயாரிக்கும் மின்சாரத்தை இந்தியா வாங்குவதற்குத் தயாராகவுள்ளது என இந்திய அரசின் பிரதிநிதி கொழும்பில் அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் தெரிவித்தார்.

✲ ✲ தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் கமிட்டி சார்பில் சென்னை கடற்கரையிலுள்ள திலகர் கட்டடத்தில் முத்தமிழ் விழாக் கொண்டாடப்பட்டது. விழாவில் சிவாஜி கணேசன் முக்கிய பேச்சாளராகக் கலந்துகொண்டார்.

✲ ✲ சென்னை நகரில் இன்னும் நான்கு இடங்களில் பெரிய மருத்துவ நிலையங்கள் அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

✲ ✲ மே 22ல் இலங்கைக் குடியரசு தினத்தையொட்டி இராணுவ, விமானப்படை அணிவகுப்புக்கள் நடைபெற்றது. அப்போது முதன்முதலாக சிங்கள இசையும் சிங்களப் பாடலும் இடம்பெற்றது!

✲ ✲ இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனம் இவ்வாண்டு ரூ5 கோடி நஷ்டம் அடைந்துள்ளது. வேலைநிறுத்தங்களும், எண்ணெய் விலை உயர்வுமே இதற்குக் காரணங்களாம்.

✲ ✲ அ தி மு க அமைப்புச் செயலாளர் திரு கே ஏ கிருஷ்ணசாமி குறிப்பிட்ட ஒரு சிலரால் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படலாமென போலீசில் புகார் செய்துள்ளார்.

✲ ✲ இவ்வாண்டின் முடிவில் இந்தியா அனுப்பவிருக்கும் செய்மதியிலிருந்து தகவல் சேகரிக்க பிரான்சு உதவிபுரிய முன்வந்துள்ளது. இந்தியாவில் ஸ்ரீஹரிகோதாவிலும், மாஸ்கோ அருகிலும் செய்மதியிலிருந்து தகவல் சேகரிக்கும் நிலையங்கள் நிறுவப்படும்.

✲ ✲ இலங்கையில் பிளவுபட்டிருந்த மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்டு கட்சி இப்போது ஒன்றுகியுள்ளது. பிளவுபட்டிருந்த இரு பகுதிகளின் தலைவர்களான பீட்டர் கெனமனும், டாக் விக்ரமசிங்காவும் இனி தம் இரு பகுதிகளையும் ஒரு கட்சியின் கீழ் இணைத்து இயங்குவார்கள்.

✲ ✲ வீணை வித்வான் பத்மஸ்ரீ ஈமனி சங்கர சாஸ்திரிக்குப் புதுவை லலித கலை அகாடமியினர் "இசை மகா யோகி" என்னும் பட்டத்தை வழங்கியுள்ளனர்.

✲ ✲ ஈழத்து உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் கைதுசெய்யப்பட்டு, சிறையில் தள்ளப்பட்டு ஜுன் மாதத்துடன் இரு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டது. இதுவரை நீதி விசாரணையின்றியே இவர் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

✲ ✲ மதுரை வைகை ஆற்றில் அழகர் கோவில் சுவாமி தீர்த்தமாடுவதைத் தரிசிப்பதற்காக இரண்டு லட்சம் மக்கள் கூடியிருந்தனர்.

✲ ✲ சென்னை, மணலி தொழிற் பகுதியில் "நாகபால் அம்பாடி பெட்ரோ—ரசாயன சுத்திகரிப்பு நிறுவனத்தின் திராவகக் கசடு சிதைவு ஆலை" மே மாதம் 25ந் தேதி செயல்படத் தொடங்கியது.

✲ ✲ தமிழ்நாடு புதுக் காங்கிரஸ் கட்சி கமிட்டியின் பொருளாளர் திரு ஹாஜா ஷெரீப் சொந்தக் காரணங்களுக்காக ராஜினமா செய்துவிட்டார்.

✲ ✲ இலங்கையின் சட்டக் கல்லூரியும் அதனைச் சார்ந்த நிறுவனங்களும் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது. சட்டக் கல்லூரியின் அதிபர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார். இதற்கான காரணங்கள் இரசியமாக வைக்கப்பட்டுள்ளதாம்.

✲ ✲ பதினெரு கோடி ரூபாய் செலவில் சுமார் 50,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும்வகையில் கிராமப்புறத் தீவிர முன்னேற்றத் திட்டங்கள் அமல்படுத்தப்படும் என முதல்வர் கருணநிதி தெரிவித்தார். பாசனக்குளங்கள், மற்றும் வாய்க்கால் அமைத்தல், கரைகளை உயர்த்துதல், மதகுகள் கட்டுதல் போன்ற சிறு திட்டங்களுக்கு இத்தொகை செலவழிக்கப்படும்.

✲ ✲ இலங்கையில் சில பகுதிகளில் மூன்று வகை தேநீர் விற்கின்றனர் ஹோட்டல்காரர்கள்! அராபியத் தேநீர் எனப்படும் தேநீர் கேட்பவர்களுக்கு வெறுந் தேநீருடன் பேரீச்சம்பழம் ஒன்று கொடுக்கப்படுகின்றது. இதன் விலை பத்து சதம். சிங்களத் தேநீர் கேட்பவர்களுக்கு வெறுந் தேநீருடன் கருப்பட்டி ஒரு துண்டு கொடுக்கப்படுமாம். இதன் விலை இருபது சதம். ஜாவாத் தேநீர் கேட்பவர்களுக்கு பாலுடன், சீனி கலந்த தேநீர் கொடுக்கப்படுகின்றதாம். இதன் விலை ஐம்பது சதமாம்.

தமிழ்நாட்டிலிருந்து இலங்கை வரும் யாத்திரிகர்கள் தமிழ்மாநிலங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் செல்லக் கூடாதென கட்டுப்பாடு விதிக்கப் படுகின்றதாம்.

மதுரை நகரிலிருந்து இந்தியன் ஏர்லைன்ஸ் மூலம் தினந்தோறும் 2000கிலோ மல்லிகைப்பூக்கள் ஏற்றுமதி செய்யப் படுகின்றதாம்.

* * தமிழக முதல்வர் மு கருணாநிதி அவர்களின் 50 வயது பூர்த்தியையொட்டி தமிழ்நாடு முழுவதும் அவருக்குப் பொன் விழாக் கொண்டாடப்பட்டது.

* * நான்காவது அனைத்திந்திய திராவிட மொழியியல் மாநாடு அண்மையில் சென்னையில் நடைபெற்றது. மாநாட்டை சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு சுந்தரவடிவேலு அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

* * இலங்கை அரசின் திரைப்படக் கூட்டுத்தாபனம் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்ய ஒப்பந்தம் செய்துள்ள தமிழ் திரைப் படங்களின் பாடல்களை மட்டுமே இனி இலங்கை வானொலியில் ஒலிபரப்பலாமாம்.

* * இலங்கையின் மொத்த வாக்காளர் தொகை 6,182,160 ஆகும் என தேர்தல் அதிபர் தெரிவித்துள்ளார். இதில் மிகக் கூடிய வாக்காளர்கள் உள்ள தொகுதி மத்திய கொழும்பு ஆகும். மூன்று நாடாளுமன்ற அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் இத்தொகுதியில் 103,705 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனராம்.

* * இந்தியாவிலேயே முதன்முறையாக ஊதியம் பெறுவோருக்கு ஓய்வுச் சம்பளத் திட்டத்தை ஏற்படுத்தவுள்ளது தமிழக அரசு. இதன்படி தமது 30வது வயதிலிருந்து மாதந்தோறும் 10 ரூபாயை அரசின்மூலம் சேமிப்பவர்களுக்கு 55வயதிற்குப் பின்னர் மாதாமாதம் ரூ100 ஓய்வுச் சம்பளம் அளிக்கப்படும்.

* * சத்ரபதி சிவாஜியின் முடிசூட்டு விழாவின் 300வது ஆண்டு விழா இந்தியா முழுவதும் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

* * அமரர் டாக்டர் ஏ லட்சுமணா சுவாமி முதலியாரின் பணிகளைப் பாராட்டி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவரது படத்தை திறந்து வைத்துப் பேசினார் முன்னாள் முதல்வர் திரு பக்தவத்சலம்.

* * இலங்கையில் நடைபெற்றுவந்த அந்நிய செலவாணி கடத்தல் விசாரணையின் போது முன்னாள் கவர்னர்ஜெனரல் ஒலிவர் குணதிலகா, முன்னாள் தூதுவர் சர் வேலுப்பிள்ளை குமாரசுவாமி போன்ற பல முக்கிய பிரமுகர்களின் பெயர்கள் கூட அடிபட்டனவாம்.

* * "விஞ்ஞானத்திலும் மெய்ஞ்ஞானத்திலும் உலகம் அதிக வேகமாக முன்னேறி வருகின்றது. அதில் தென்னாபிரிக்கத்தமிழ் மக்களும் பூரண பங்கெடுத்துக் கொண்டு வாழ்வில் முன்னேற முயற்சிக்க வேண்டும்" என தனது புத்தாண்டுச் செய்தியில் கோரிக்கை விடுத்துள்ளார் நேட்டால் தமிழ் வேதிக் கழகத்தின் தலைவர் திரு செட்டி அவர்கள்.

* * இந்தியக் கலை, கலாச்சாரம் இவற்றை மிகவும் வேகமாக லண்டனில் பரப்பி வரும் பாரதீய வித்யா பவனத்தினர் தமது முதல் ஆண்டு விழாவை அண்மையில் நடத்தினார்கள். லண்டன் பாரதீய வித்யா பவனத்தின் செயலாளர் திரு மாத்தூர் கிருஷ்ணமூர்த்தியும், துணைச் செயலாளர் திரு வெங்கடாசலமும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

* * "உலகத் தமிழர்களே ஒன்றுபடுங்கள்" என்னும் லட்சியக் கோரிக்கையுடன் உலகத் தமிழர் குரல் என்னும் தமிழ் ஏட்டை ஆரம்பித்துள்ளார் கண்டியைச் சேர்ந்த திரு குரும்பசிட்டி கனகரத்தினம் அவர்கள்.

* * பூட்டானின் மன்னராக 19 வயது ஜிம்மி சிங்கி முடி சூட்டப்பட்டார். இதுவரை பூட்டானில் பட்டத்துக்கு வந்தவர்களில் இவரே மிகவும் இளைய வயதினர் ஆவார்.

* * சர்வதேச செலாவணி நிதியில் இந்தியப் பிரிவின் நிர்வாக டைரக்டராகப் பதவியேற்கின்றார் இந்திய ரிசர்வ் வங்கியின் கவர்னர் திரு எஸ் ஜகந்நாதன் அவர்கள்.

* * மே மாதம் 15 முதல் இந்தியாவில் தபால் தந்திக்கட்டணங்கள் உயர்ந்துள்ளன. அதன்படி அஞ்சல் அட்டை 15 காசாகவும், உள்நாட்டு அஞ்சல் தாள் 20 காசாகவும், அஞ்சல் உறை 25 காசாகவும் உயர்ந்துள்ளது.

* * இலங்கையின், மன்னார் தேர்தல் வழக்கு வவுனியா உயர் நீதிமன்றத்தில் ஆகஸ்டு 19ந் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றது.


Laurie de Mel
& Associates

investments
finance
mortgages
pensions
insurance
assurance
brokers

CONSULT US FOR
motor car insurance
motor security plan (coverage for breathlyser/speeding risks.
your consultant:
P. SRINIVASAN 01-622 7020
4 FRANCONIA ROAD,
CLAPHAM COMMON,
LONDON S.W.4.

# அணு யுகத்தில் இந்தியா...

மே மாதம் 18ம் நாளன்று இந்தியா அணுகுண்டை வெடித்ததை அறிந்த இந்திய மக்களுக்கு இச் செய்தி பூரிப்பையே அளித்து விட்டதாம்! அணுகுண்டு பற்றிய சில சுவையான தகவல்களை இங்கே தருகின்றோம்.

அணுவெடி தயாரிக்க இந்தியாவுக்கு சுமார் ரூ161 கோடி செலவாகியதாம். வெடிக்கப்பட்ட அணுகுண்டின் வெளியேற்றச் சக்தி 15 கிலோடன்ஸ் ஆகும். 330 அடி ஆளத்தில் இது வெடிக்கப்பட்டதாம்.

அணுகுண்டு பரிசோதனையில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர் ஒரு தென்னிந்திய விஞ்ஞானியே! அவர் பெயர் டாக்டர் ஆர் ராமண்ணா. இந்திய அணுசக்தி கமிஷனின் முதல்வர் டாக் ஹோமி சேத்னா அவர்கள் பரிசோதனையின் முன்னர் பல இரவுகள் தூக்கமின்றி இவர் செயல்பட்டாராம்.

அணுகுண்டுப் பரிசோதனைக்குப் பயன்படுத்தப்பட்ட தொழில்நுணுக்கம் முழுக்க முழுக்க இந்தியாவினுடையதே. "இன்னும் தகவல்கள் தேவையானால் தரைக்கு அடியில் மேலும் அணுவெடி சோதனைகள் நடத்துவது பற்றி அணுசக்திக் கமிஷன் பரிசீலனை செய்யும்" எனத் தெரிவித்துள்ளார் அணுசக்திக் கமிஷனின் அதிபர் டாக்டர் . ஹோமி சேத்னா. குறைந்தளவில் எண்ணெய் கிடைப்பதற்கான தூண்டுகோலாகவும் இந்தச் சோதனைகள் பயன்படுத்தப்படுமாம்.

அணுகுண்டை வெடிக்கக் காரணமாய் விளங்கிய டாக்டர் ஆர் ராமண்ணா அவர்கள் பம்பாய் அருகிலுள்ள பாபா அணு ஆய்வு நிறுவனத்தின் அதிபர் ஆவார். 49 வயது நிரம்பிய இவர் தலைசிறந்த அணு விஞ்ஞானி மட்டுமல்லாது உலகிலேயே தலைசிறந்த விஞ்ஞானிகளில் ஒருவராம். இவருக்கு 1973ல் இந்திய ஜனாதிபதியினால் பத்ம பூஷண் விருது அளிக்கப்பட்டது.

அணுசக்திக்குப் பயன்படுத்தக்கூடிய இரு முக்கிய தாதுப் பொருட்கள் 1. யூரேனியம் (URANIUM) 2. தோரியம் (THORIUM) ஆகும். இதில் யூரேனியம் இந்தியாவில் சொற்பளவில் தான் கிடைக்கின்றதாம். முக்கியமாக ஜடுகுடா சுரங்கப் பகுதிகளில் தான் யூரேனியம் கிடைக்கின்றது. உலகில் தோரியம் தாதுப்பொருள் கூடியளவில் காணப்படும் நாடு எது தெரியுமா? இந்தியா தானும்! இங்கு உலகில் காணப்படும் தோரியத்தில் 80வீதத்திற்கு மேல் காணப்படுகின்றதாம். கேரளாவின் கரைப்பகுதிகளில், சிறப்பாக கோவலம் கரைப்பகுதிகளில் தான் தோரியத்தின் மூலப் பொருள் கூடியளவில் காணப்படுகின்றதாம்.

அணுசக்தி மூலம் இயங்கும் அணுமின் நிலையங்கள் இரண்டு தற்போது இந்தியாவில் இயங்குகின்றன. அவை: பம்பாயின் அருகிலுள்ள 'தாராபூர்' அணுமின் நிலையமும், ராஜஸ்தானிலுள்ள 'ரணபிரதாப் சாகர்' அணுமின் நிலையமே. மூன்றாவது அணுசக்தி மின் நிலையம் தமிழ்நாட்டில் மகாபலிபுரத்திற்கு அருகில் 'கல்பாக்கத்தில்' நிறுவப்பட்டு வருகின்றது. இம்மூன்று அணுமின் நிலையங்களும் முழுமையாக இயங்கும்போது ஒவ்வொன்றும் சுமார் 400 மெகாவாட் மின்சாரத்தை தயாரிக்கும் தகுதி பெற்றிருக்குமாம். உத்தரப் பிரதேசத்தில் 'நரோரா' என்னுமிடத்தில் இந்தியாவின் நான்காவது அணுசக்தி நிலையம் ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் தயாராகிவருகின்றதாம்.

— சேரன் (லண்டன்)


**TAMIL FILM & SOCIAL CLUB**
[43 YORK ROAD, BATTERSEA, LONDON S.W.11]

CONWAY HALL
25 RED LION SQUARE
LONDON W C 1

*** சாந்தி
சிவாஜி கணேசன் ~ விஜயகுமாரி
தேவிகா ~ மனோரமா ~ நாகேஷ்
ஜூன் 29 சனிக்கிழமை மாலை 7.00





அனுமதி : 50 பென்ஸ் ; குழந்தைகள் 25 பென்ஸ்
தொலைபேசி : 01-228 8751 ; 228 1626






இரத்தத் திலகம் ***
சிவாஜி கணேசன் ~ சாவித்திரி
மனோரமா ~ நாகேஷ்
ஜூலை 13 சனிக்கிழமை மாலை 7.00

# JAMALMOHIDEENS

**213 Seven Sisters Road, London N4 3NG**

Tel: 01-263 1718
01-263 0533

**IMPORTERS AND WHOLESALE CASH & CARRY**

Cotton Vests & Banians, Cotton Handloom - Lungis & Sarees. Madras Cotton Fabrics & Crepe (Cheese) Fabrics. Velveteen Blazers and Red Rose & Flower Queen Agarbathis.

Representatives & Appointed Agents for:

Messrs. Zenith International Corporation Ltd., Madras.
Messrs. Mars Hosiery & Company, Tirupur.
Messrs. Mathalaimuthu Mudaliar & Sons, Karur.
Messrs. Dhanalakshmi Weaving Works, Cannanore.
Messrs. Transworld Export Corporation, Madras.
Messrs. L.K.S. Agarbathi Works, Madras.

Bankers: State Bank of India, West End Branch, London, W1X 1RB.

LET US HELP ARRANGE ALL YOUR TRAVEL PLANS
WE HAVE UP TO THE MINUTE INFORMATION ON
SCHEDULES, FARES, PASSPORTS, VISA, HEALTH
REGULATIONS AND BAGGAGE OR FREIGHT FORWARDING.

You See more, $ave more And Have more Fun when you are in the Expert hands of

# RAJ TRAVEL SERVICE

501 FIFTH AVENUE SUITE 2001
NEW YORK, N.Y. 10017
212—972-0768

Res. 201—374-3217, 212—972-0756

## Trident TRAVEL & TOURS

When you want to travel please think of **Trident Travel & Tours** we can offer you the most competetive prices to:

**INDIA, DACCA, HONG KONG, SINGAPORE, AUSTRALIA, CANADA, NEW YORK AND ALL OTHER PARTS OF THE WORLD IN OUR JET FLIGHTS.**

For further informations please write or telephone:

318 HOE STREET,
LONDON, E.17.
Tel.: 01-520 7911

CITY OFFICE:
18 YORK WAY,
LONDON, N.1.
Tel.: 01-837 9402
Tel.: 01-837 2711

IN INDIA:
TRANS-CONTINENTAL TRAVEL TOURS
202 JOLLY BHAVAN 1,
10 NEW MARINE LINE,
BOMBAY—20.

# நம்மைச் சுற்றிய உலகம்



⊕ ⊕ ⊕ சென்ற ஏப்பிரல் மாதம் இங்கிலாந்தில், சர்ரே பகுதியில் வாழ்ந்த ஒரு கோடீஸ்வரர் காலமானார். அவர் விட்டுச் சென்ற சொத்து எவ்வளவு தெரியுமா? 3,255,974 பவுன்கள்! இதிலிருந்து 1,011,108 பவுன்கள் அரசாங்கத்துக்கு "சாவு வரி" (Death Duty) யாக செலுத்தப்படுமாம்! கோடீஸ்வரர் தன் உயிலில் தன் வீட்டைப் பாதுகாத்தவருக்கு 2,500 பவுன்களும், தோட்டக்காரருக்கு 1,500 பவுன்களையும் மீதியைத் தன் மகளுக்கும் எழுதி வைத்துவிட்டுப் போனார்.

⊕ ⊕ ⊕ ஜப்பானிய நிறுவனம் ஒன்று தனது சுரங்கத் தொழில் வேலையில் மிஞ்சும், தாமிரம் கலந்த, நச்சுத் திரவத்தை விவசாய நிலங்களில் கொண்டு கொட்டியதை எதிர்த்து நடந்த வழக்கில் அந்நிறுவனம் நஷ்டஈடு தரவேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நஷ்டஈடு எவ்வளவு தெரியுமா? 2,348,000 பவுன்கள்! நச்சுச்சூழல் பரவாது தடுக்க வேண்டியதின் அவசியம் இப்போது புரிகிறதல்லவா?

⊕ ⊕ ⊕ பிரித்தானிய இரசாயன நிறுவனங்கள் நான்கு ,வரும் ஆறு மாதங்களுக்குள் 40 லட்சம் பவுன்கள் செலவழித்து புற்றுநோய் அபாயத்தைத் தடுக்கப் போகின்றனவாம். இந்நிறுவனங்கள் தயாரிக்கும் பி.வி.சி. (P.V.C) என்ற பிளாஸ்டிக் தயாரிப்பில் இடைப்பொருளான 'வைனைல் க்ளோரைடு மோனோமர்' என்ற பொருள் வேலையாட்களுக்கு புற்றுநோயை உண்டாக்குகிறதாம்!

⊕ ⊕ ⊕ கிரீஸுக்கும் துருக்கிக்கும் போர் எந்நேரமும் மூளலாம்! காரணம்? 'ஈஜியன்' கடலுக்கு அடியில் எரி எண்ணெய்ப்படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுதான்!

⊕ ⊕ ⊕ இத்தாலிய மக்களுக்கு விவாகரத்து செய்துகொள்ளும் உரிமை மறுக்கப்படுவது பிடிக்கவில்லை. எதிர்த்து வாக்களித்து இத்தாலிய விவாகரத்துச் சட்டம் நீக்கப்படாமல் பார்த்துக்கொண்டார்கள். ஆளும் கட்சிக்கும், வத்திகன் தலைவர்களுக்கும் கவலையை அளித்துள்ளது இந்த விவகாரம்!

⊕ ⊕ ⊕ அண்மையில் பதவி விலகினாரே மேற்கு ஜேர்மானிய அதிபர் வில்லி பிராண்ட், அவர் இவ்வாறு செய்ய யார் காரணம்? அவரது அலுவலக அந்தரங்கச் செயலாளராகப் பணியாற்றிய கிழக்கு ஜெர்மானிய உளவாளி 'குன்தர் கில்லாமே' மட்டும் காரணமல்லவாம்! 'புண்டஸ் நாவற்ரிவற்டன் டீன்ஸ்ட்' (Bundes Nachrichten Dienst) என்ற மேற்கு ஜெர்மானிய அரசாங்க ரகசியத் தகவல் நிலையத்தில் இருந்தவர்களும் காரணமாம். அவர்களுக்கு வில்லி பிராண்ட் கம்யூனிச நாடுகளுடன் உறவாடுவது பிடிக்கவில்லையாம். இப்போது மேற்கு ஜெர்மானியப் பத்திரிகைகளில் அம்பலப் படுத்தப்படும் பிராண்ட்டின் அந்தரங்க விவகாரங்கள் யாவும் இந்த B.N.D. நிறுவனத்தில் இருந்து தான் வந்திருக்கவேண்டும் என நம்பப்படுகிறதாம். இதயத்தில் வேதனையையும் கையில் நோபல் பரிசையும் வைத்துக் கொண்டு பதவி விலகிவிட்டார் பிராண்ட்.

⊕ ⊕ ⊕ ஆபிரிக்காவில் உள்ள போர்ச்சுகல் காலனியான 'மொசாம்பிக்'கின் ஆண்டு வருமானமான 2000லட்சம் பவுன்களில் 800லட்சம் பவுன்கள் 'போர்ச்சுகல் ஆதிக்கத்தைவிட்டு மீளப் போராடும்' விடுதலை இயக்கமான 'ஃப்ரெலிமோ' கொரில்லாக்களை எதிர்க்கச் செலவிடப்படுகிறது.

⊕ ⊕ ⊕ அதிபர் நிக்சனின் காலைச் சுற்றிக்கொண்டு கடிக்கக் காத்திருக்கும் வாட்டர்கேட் விவகாரத்தினால் பணம் சம்பாதித்தவர்கள் எத்தனையோ பேர் உண்டு. சமீபத்தில் வெளியிடப்பட்ட வெள்ளைமாளிகை "ரகசிய ஒலிப்பதிவு நாடாக்களில்" (Transcription of Tapes) உள்ள உரையாடலை புத்தகமாக வெளியிட்டிருக்கிறது ஒரு நிறுவனம். விற்பனை ஏராளமாம்! நிக்சனுக்குத் திண்டாட்டம்! யாரோ ஒரு பதிப்பாளருக்குக் கொண்டாட்டம்!

⊕ ⊕ ⊕ அமெரிக்கர்கள் ஆண்டுக்கு 2000லட்சம் பவுன்களை தங்கள் வளர்ப்புப் பிராணிகளின் சுகவாழ்வுக்காகச் செலவழிக்கிறார்களாம். இந்தப் பணத்திலிருந்து நாய்களுக்குக் கருத்தடைச் சாதனங்கள், அஜீர்ண மாத்திரைகள், சிக்குபிடித்த முடிகளை மிருதுவாக வைத்திருக்கும் தைலங்கள், இடுப்பு வலியால் அவதிப்படும் டாஷ்ஹவுண்ட் நாய்களுக்கான விஷேஷமான நடைவண்டிகள் ஆகியவை வாங்கப்படுகின்றனவாம். நம்நாட்டு நாய்கள் இதைக் கேள்விப்பட்டு அடுத்த பிறவியிலாவது அமரிக்காவில் பிறக்கவேண்டும் என்று கடவுளை வேண்டுகின்றனவோ என்னவோ?

⊕ ⊕ ⊕ சென்றமாதம் லண்டனில் தொலைக்காட்சி மூலம் ஆதரவற்ற குழந்தைகளை தத்து எடுத்துக்கொள்ளும் முறை பரீட்சார்த்தமாகச் செயல் படுத்தப்பட்டது. தொலைக்காட்சியில் நான்கு குழந்தைகள் காட்டப்பட்டு அவர்களைத்தத்து எடுத்துக்கொள்ள பெற்றோர் தேவை என்று அறிவிக்கப்பட்டது. தொடர்பு கொண்டோர் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 1700!!

⊕ ⊕ ⊕ கலிபோர்னிய சிறையொன்றில் கைதிகளுக்கு அச்சுத்துறை தொழில்திறன் கற்பிக்கப்பட்டது. மூன்று கைதிகள் மிகவும் திறமைசாலிகளாக இருந்தும் அவர்கள் வகுப்பிலிருந்து அகற்றப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். ஏன் தெரியுமா? அவர்கள் மூவரும் தங்கள் கல்வித்திறனை முழுமையாகப் பயன்படுத்தி சிறைச்சாலைக் கல்விக்கூட அச்சகத்திலேயே கள்ள நோட்டுக்களை அடித்தார்களாம்!!

⊕ ⊕ ⊕ 'ராட்னி அலென் ரிப்பி' என்ற 5வயது அமரிக்க நீக்ரோச் சிறுவன் அடுத்த ஆண்டு ஒரு பத்து லட்சம் டாலர்களை எண்ணப் போகிறான். இந்தச் சிறுவன் அமரிக்கத் தொலைகாட்சிகளில் குட்டி நட்சத்திரமாக ஜொலிக்கிறான். அவன் சம்பாதிக்கும் பணமெல்லாம் அவன் பெயரில் ஒரு சேமிப்பில் வைக்கப்பட்டுள்ளது. அவன் பல்கலைக்கழகப் படிப்புக்குப் போகும்போது அப்பணம் அவனைச் சேரும்.

⊕ ⊕ ⊕ 'சுன்மையுங் மூன்' என்ற 54வயது கொரியா நாட்டு மனிதர் அமரிக்காவில் ஒரு புதிய 'மதப்புரட்சியை' ஏற்படுத்திவிட்டார். "மூனிசம்" என்ற பெயரில் ஒரு புதிய சித்தாந்தமும், 10000பேர்களின் ஆதரவையும் பெற்றுள்ளார். மூன், ஒரு ஈஸ்டர் பெருநாளன்று ஏசுநாதரை 16வயதுச் சிறுவனாகப் பார்த்ததாகச் சொல்கிறார்!

தொகுப்பு : டாக். ஹரி வேங்கடேசன் (அயர்லாந்து)

# MILANS

WHERE THE FASHION STARTS

## import - wholesale - retail

we have the largest selection

of sarees in whole of England



BANARASI SILK SAREES
JAPANESE SAREES AND PRINTED SAREES
AND MANY OTHER TYPES OF SAREES

PETTI-COATS IN VARIOUS COLOURS

BLOUSE PIECES IN
HUNDREDS OF SHADES.

we also specialise in

## indian records - stainless steel utensils

OUR PRICES AND QUALITY ARE UNBEATABLE
PLEASE COME AND SEE FOR YOURSELF
AT ANY OF OUR BRANCHES

368–370 STRATFORD ROAD
SPARKHILL
BIRMINGHAM B11 4AB
021-773-2214

88-92 BELGRAVE ROAD
LEICESTER
0533-21345

105 CRICKLEWOOD BROADWAY
CRICKLEWOOD
LONDON N W 2

40 HARTINGTON ROAD
LEICESTER
0533-20393

# மேற்கு நாடுகளின் செய்திகள்

## லண்டன் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுப்பொதுக்கூட்டமும் செயற்குழுத் தேர்தலும்!

லண்டன் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தையும் புதிய செயற்குழுவிக்கான தேர்தலையும் எதிர்வரும் ஜூலை 28ந் தேதி ஞாயிறன்று நடத்துவதாக சங்கத்தின் செயற்குழு முடிவுசெய்துள்ளது. கூட்டம் நடைபெறும் இடத்தின் விபரம் விரைவில் அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்கப்படும். சந்தாவைப் புதிப்பிக்காத அங்கத்தினரும், புதிதாகச் சேர விரும்புவோரும் விரைவில் பதிவு செய்யுமாறு சங்கத்தின் செயலாளர் அறிக்கை விடுத்துள்ளார்.

## நியூ யார்க்கில் பத்மினியின் நிகழ்ச்சி

மே மாதம் 18ம் நாள் நியூ யார்க் சர்வகலாசாலையைச் சேர்ந்த சட்டக் கல்லூரியின் டிவஸ்மன் மண்டபம் நிறைந்து வழிந்தது. வட அமெரிக்கத் தமிழர்கள் உட்பட அமெரிக்க — இந்திய மக்கள் அன்று மாலை வருகை தந்திருந்தது பத்மினியின் "வள்ளி திருமணம்" என்ற நாட்டிய நாடகத்தைக் கண்டு களிக்கவே.

"வள்ளி திருமணம்" நாட்டிய நாடகத்துடன் "தசாவதாரம்", "மோகினி ஆட்டம்", "பஞ்சரத்ன கீர்த்தனம்" நிகழ்ச்சிகளும் இணைக்கப்பட்டிருந்தன. "தசாவதாரம்" நாட்டிய நாடகத்தில் பத்மினி — ராகினி சகோதரிகள் இருவரும் பங்குபற்றினார்கள். "மோகினி ஆட்டத்தில்" அம்பிகா பங்குபற்றினார். "வள்ளி திருமணம்" நாட்டிய நாடகத்தில் முருகனாகவும், முருகனின் பல வேடங்களான வளையல் செட்டியாகவும், கிழ சந்நியாசியாகவும் வந்து நல்லபடியாக நடித்தார் ராகினி. அம்பிகா நாரத மகரிஷியாக பங்குபற்றினார். விநயகராக லலிதாவும் வள்ளியின் தோழிாராக மேகலா, உஷா, வித்தியா, பத்மா ஆகியோர் நடித்தனர். வள்ளியாக வந்த பத்மினி உருக்கமாய் நடித்தும் நடனமாடியும் வந்திருந்தோரை வெகுவாகக் கவர்ந்தார். ராகினியும் பத்மினியும் முருகனும் வள்ளியுமாக வந்தபோது மிகவும் தத்ரூபமாக இருந்தது.

திருமதி பத்மினி இந்த நாட்டிய—நாடக நிகழ்ச்சியை நியூ யார்க் தமிழ்ச் சங்கத்திற்கென தயார் செய்திருந்தார். நிகழ்ச்சியில் கலந்துகொள்ள தமிழகத்திலிருந்து வந்திருந்தார் ராகினி. உடைகள், நகைகள், வாத்தியங்கள் அனைத்தும் தமிழகத்திலிருந்தே கொண்டுவரப்பட்டிருந்தன. நிகழ்ச்சியின்போது இசையை ராமநாதபுரம் ராகவன் (மிருதங்கம்), டாக்டர் விஜயகுமார் பஞ்சாட்சரம் (புல்லாங்குழல்), காந்தா பாலசுப்பிரமணியம் (வீணை) வசந்தா ஸ்ரீ வத்சன், ராஜம் அனந்தன் (வாய்ப்பாட்டு) ஆகியோர் போற்றத்தக்க முறையில் அளித்தனர்.

தமிழர்களின் கலைக் கொடியை இந்த மாநகரிலும் பறக்க வைத்த நியூ யார்க் தமிழ்ச் சங்கத்தினர் முன்னர் "கண்ணகி" நாட்டிய நாடகத்தை நடத்தினர். இப்போது "வள்ளி திருமணத்தை" அளித்துள்ளனர். அடுத்தது என்ன என்று வட அமெரிக்கத் தமிழர் பலரும் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் டாக்டர் குமரேசன் அவர்களைக் கேட்ட வண்ணம் இருக்கின்றார்கள்.

நியூ யார்க் தமிழ்ச் சங்கத்தினர் இந்த நிகழ்ச்சியை நியூயார்க் கோவிலுக்கென நிதி திரட்டும் முகமாக ஏற்பாடு செய்திருந்தனர்.

— நமது நிருபர்.

## பாரிசு தமிழ்ச் சங்கத்திற்கு ஒரு படிப்பகம்!

நீண்ட நாட்களாகத் தான் கொண்டிருந்த எண்ணத்தை நிறைவேற்ற முயற்சி செய்து வருகின்றது பாரிசு தமிழ்ச் சங்கத்தின் செயற்குழு. அம்முயற்சி வெற்றியடைந்து நடைமுறையில் வடிவு கொடுக்கும் பொருட்டு வெகுவிரைவில் தமிழ்ச் சங்கத்தின் படிப்பகம் (BIBLIOTHEQUE) துவங்கப் படவிருக்கின்றது. என களிப்புடன் லண்டன் முரசிற்குத் தெரிவித்தார் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. தசரதன் அவர்கள். இத்திட்டம் நிறைவேறினால் சங்கத்தின் அங்கத்தினர்களும் பிரான்சு நாட்டின் தமிழர்களும் மிகவும் பயன்படுவோர்கள் எனவும் தெரிவித்தார் அவர்.

## வைகாசி விசாகம் பூஜை

ஜூன் மாதம் 2ம் நாளன்று லண்டன், விம்பிள்டன் பார்க் மண்டபத்தில் வைகாசி விசாகத் திருநாளைக் கொண்டாடினர் பிரித்தானிய சைவ மாமன்றத்தினர். முருக அபிஷேகத்தின் போது திருவாளர்கள் சங்கரலிங்கம், வாமதேவன், வைரவமூர்த்தி, பொன்னையா, பெருமாள், தங்கேஸ்வரன், வள்ளிகாந்தன் ஆகியோர் முருக அர்ச்சனை நடத்தினார்கள். பிரம்ம குமாரிஸ் இயக்கத்தைச் சேர்ந்த சகோதரி டாக்டர் நிர்மலா அவர்களும் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார். திருமதி சரோஜினி இராமநாதன், சாரதா நம்பி ஆரூரன் ஆகியோரின் கூட்டுவழிபாட்டுடன் நிகழ்ச்சி முடிவடைந்தது. விழா மன்றத்தின் துணைச்செயலாளர் திரு தங்கேஸ்வரன் அவர்கள் உபயத்தில் நடைபெற்றது.

அண்ணுவின் அடிச்சுவட்டில்.....

"மறைந்த மா மேதை அறிஞர் அண்ணு அவர்களின் பேச்சை நான் ஒரே ஒரு தடவை கேட்டிருக்கின்றேன். உங்களில் அநேகருக்கு அவருடைய சொற்பொழிவைக் கேட்பதற்கு முன்பே அவர் நம்மை விட்டுப் பிரிந்திருக்கலாம்.. இப்போது நீங்கள் கேட்ட சொற்பொழிவு இருக்கிறதே இதுதான் அறிஞர் அண்ணுவின் எதிரொலி." — லண்டன் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு செல்வநாயகம் அவர்கள் 26.5.74 அன்று நடந்த வரவேற்புக்கூட்டத்தில் உயர் நீதிமன்ற நீதிபதி திரு கோகுலகிருஷ்ணன் அவர்களின் சொற்பொழிவுக்குப் பின்னர் கூறிய வார்த்தைகள் தாம் அவை. தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த நீதிபதி திரு கோகுலகிருஷ்ணன் அவர்களுக்கும், மகாகவி சுப்ரமண்ய பாரதியாரின் பேத்தியாரும் தமிழ் விரிவுரையாளருமான டாக்டர் விஜயபாரதி அவர்களுக்கும் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் உண்மையிலேயே நல்ல தமிழைக் கேட்டு இன்புறுவதற்கு அரிய வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தனர் லண்டன் தமிழ்ச் சங்கத்தினர்.

மகாகவி பாரதியார் அவர்களின் பேத்தி டாக்டர் திருமதி விஜயபாரதி அவர்கள் தனது பாட்டனர் இயற்றிய பாடல்களைப்பாடி எல்லோரையும் மெய்மறக்கச் செய்து காலஞ்சென்ற சுப்ரமண்ய பாரதியார் அவர்களை ஒவ்வொருவர் மனக்கண் முன்னும் கொண்டு வந்து நிறுத்தினர். மேலும், லண்டன் தமிழ்ச் சங்கத்தைப்பற்றி நீண்டநாட்களுக்கு முன்பே தான் கேள்விப்பட்டிருப்பதாகவும், கடந்த 5 ஆண்டுகளாக கனடாவில் தங்கி தானும்,தன் கணவரும் பாரதியாரைப்பற்றி விரிவுரைகள் நடத்தி வருவதாகவும், தற்சமயம் லண்டன் பல்கலைக்கழகத்தில் தற்காலிகமாக தமிழ்ப் பகுதியில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். சிறப்புப் பேச்சாளர் நீதிபதி கோகுலகிருஷ்ணன் அவர்கள் தனது உரையின் போது தமிழர்களின் பண்பாடு பண்டைய காலத்திலிருந்தே எவ்வளவு உயர்ந்து விளங்குகின்றது என்பதை பழம்பெரும் நூல்களிலிருந்து ஆதாரம் காட்டினர். தமிழர்களின் கற்பு, கொடை, பண்பாடு, கட்டுப்பாடு சகோதரத்துவம், தோழமை ஆகிய உயர் பண்புகளை கம்பர், வள்ளுவர்,பாரதியார், பாரதிதாசன் போன்ற புலவர்களின் படைப்புக்களிலிருந்து ஆதாரங்காட்டி விளக்கினர். தமிழைப் படித்தவன், தமிழ்க் கலாச்சாரத்தைக் கடைப்பிடிப்பவன், தன்னைத் தமிழன் என்று சொல்லுபவன் எந்த நாட்டைச் சார்ந்தவனுயினும் சரியே அவனைத் தமிழன் என்று நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டார்.

தஞ்சையிலிருந்து வாங்கிவந்த சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்ட தட்டு ஒன்றையும், தமிழ் இசைகள் பதிவு செய்யப்பட்ட 'பதிவு நாடா' ஒன்றையும் லண்டன் தமிழ்ச் சங்கத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்தார் அவர். தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் திரு சூ க சுப்பிரமணியம் அவர்கள் நன்றியுரையை அழகு தமிழில் அருமையாகப் பேசினர். தமிழ்ப் பாடல் பாடி, கூட்டத்தைத் தொடக்கி வைத்த திருமதி சாரதா நம்பி ஆரூரன் கூட்டத்தின் இறுதியிலும் இறைவணக்கத்தைப் பாட, கூட்டம் இனிது முடிவுற்றது.

— எம் எஸ் ராஜ் (லண்டன்)

பி பி சி "தமிழோசையில்" ஷேக்ஸ்பியரின் நாடகம்.

பி பி சி "தமிழோசை" ஒலிபரப்பில் (இந்திய இலங்கை நேரப்படி பி ப 3.00 — 3.30 வரை 13,16 மீட்டர் சிற்றலை வரிசை ) மகாகவி ஷேக்ஸ்பியரின் துன்பியல் நாடகங்களுள் தலைசிறந்ததான "கிங் லியர்" (KING LEAR) நாடகத்தின் தமிழ் கவிதை வடிவம் கடந்த ஜூன் மாதம் 5ந் தேதியிலிருந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒலிபரப்பாகி வருகின்றது. 16 பகுதிகளாக ஒலிபரப்பாகும் இந்தத் தமிழ் வடிவத்தை தமிழோசை தயாரிப்பாளர் "சங்கர்" சங்கரமூர்த்தி அவர்கள் எழுதியிருக்கிருர். ஷேக்ஸ்பியரின் நாடகம் ஒன்று தமிழில் கவிதை வடிவில் தயாரித்து எழுதப்படுவது இதுவே முதல் முறையாகும்! கவிதை வடிவில் திறமையாக எழுதித் தயாரித்துள்ள தமிழோசை தயாரிப்பாளர் திரு சங்கரமூர்த்தி இதில் முக்கிய பாகமேற்று நடித்துள்ளார். 14ம் பக்கத்தில் நிழற்படப் பகுதியில் லியராக நடிக்கும் சங்கரும், இளைய மகள் கார்டீலியாவாக பாத்திரமேற்கும் "தமிழோசை" புகழ் திருமதி ஆனந்தி. சூர்யப்பிரகாசன் அவர்களும் தென்கிழக்கு லண்டனின் சதர்க் (SOUTHWARK) வட்டாரத்தில் உள்ள ஷேக்ஸ்பியர் அரங்கிற்கு விஜயம் செய்தபோது எடுத்த படத்தைக் காணலாம்.

திரு அப்பாவு மறைவு — எங்கள் ஆழ்ந்த அனுதாபம்.

கடந்த 6.6.74ல், லண்டன், ஈஸ்ட் ஹாம் பகுதியில் நான்கு ஆண்டு காலம் வாழ்ந்தவரும் லண்டனில் அவ்வப்போது நிகழும் தமிழ்க் கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவரும், பொதுப் பணிகளில் பங்குபற்றி அதன் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான வகையில் பொருளீட்டியவருமான 52 வயது நிரம்பிய திரு ஏ அப்பாவு லண்டன் கோயா அவர்களின் மறைவால் இங்கிலாந்தில் வதிகின்ற அவரை அறிந்த தமிழர்களும்,ஏனைய இந்தியர்களும் ஆழ்ந்த அனுதாபம் கொண்டுள்ளனர்.

அன்னவரின் பிரிவால் தமிழகம்,சிங்கை,மலேசியாவில் வதிகின்ற உற்ருர் உறவினர் மற்றும் ஆளாத் துயரில் உள்ள துணைவியார், மழலைச் செல்வன் ஆகியோர் சார்பில் கடந்த 11 6 74ல் நடைபெற்ற இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்கட்கும், பொருளீட்டியவர்கட்கும் லண்டன் தமிழ்ச் சங்கத்தினர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்ரேம்.

188 Byron Ave, London E12. — வீரசிங்கம், கோவிந்தராஜு குடும்பத்தினர்கள்.

STHALA YATHRAI & COACH TRIP TO BIRMINGHAM

A Coach Trip has been organised by the HINDU ASSOCIATION OF GREAT BRITAIN to hold a poojah at the GEETHA MANDIR, Birmingham on Sunday, 21st July in connection with KATHIRKAMAM festival. The poojah will be for SIVAN, MURUGAN AND KRISHNA. On the way the coach will stop at Stratford upon Avon (Shakespeare's birth place) for sight-seeing. meals are provided. Inclusive charges are Adults £2.25; and Children (5-12): £1-50. The Coach will start from Wimbledon Station, London S W 19 at 8.30AM and return at 10.30PM.

FOR BOOKINGS Contact: 01- 540 7710 or 01- 540 0400.




*** எண்ணெயை எரிபொருளாகக் கொண்டு, இயக்கப்பட்டுவரும் இயந்திரங்களின் எரிபொருட் கழிவுகள் அபாயமான நச்சுச் சூழலை ஏற்படுத்தவல்லன. ஆனால் இன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் புதியதொரு முறை மூலம், நாளைய இயந்திரங்கள் இவ்வாறான அபாயகரமான எரிபொருட் கழிவுகளை வெளியேற்றாது என்று இங்கிலாந்து விஞ்ஞானி 'எரிக் கொட்டல்' சொல்லியிருக்கிறார். எரி எண்ணெயுடன் நீரைக் கலந்து, எரிபொருளாகப் பாவிக்கப்படவிருக்கும் இம் முறையால் நச்சுச் சூழலை உருவாக்கும் காரணிகளில் ஒன்றான நைதரசன் வாயுவின் ஆக்சைடுகள் காற்றில் கலப்பது தடுக்கப்படுகின்றதாம். நீரை மிகச் சிறிய துணிக்கைகளாகப் பகுத்து எரி எண்ணெயுடன் கலப்பது தான் இம்முறையின் முக்கியபகுதி. 1/50,000 அங்கல விட்டத்தையுடைய மிகச் சிறிய துணிக்கைகளாகப் பிரிக்கப்பட்ட நீர், கலவையின் 70 சதவீதத்தை கொண்டிருக்குமாம். இக்கலவை எரிக்கப்படும்போது, வெப்பத்தால் விரிவடைந்து நீராவியாக மாறும் நீர்த்துணிக்கைகள் எண்ணெய் எரிக்கப்படும் அளவை அதிகரிப்பதுடன், வழமையாக காற்றுடன் எரிபடும்போது உருவாகும் நைதரசனின் நச்சு ஆக்சைடுகளை தடைசெய்யும் விலகின்றன. புதுமையான இம்முறையை அமெரிக்காவில் பரீட்சிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

*** வாழக்கூடிய சூழலிருந்து இயற்கையின் கொரேத்தால் — வரட்சி வெப்ப மாறுதல்கள், பிரிபட்டாலும் உயிர் வாழக்கூடிய புதியதொரு பக்டீரியா அண்டார்டிக்காவின் உறை பனித் தரையின் 1260 அடி ஆழத்திற்குக் கீழ் கண்டுபிடித்திருக்கிறார்கள் அமெரிக்க உயிரினவியல் விஞ்ஞானிகள் இருவர். ஏத்தாழ பத்து லட்சம் ஆண்டுகள் பழமையான தரைப்பகுதியை ஆய்ந்தபோதுதான் இவை கண்டுபிடிக்கப்பட்டனவாம். மேற்கொள்ளப்பட்டுவரும் ஆராய்ச்சிகள் மூலம் வியாழனின் தரையிலும் இவ்வகை உயிரினங்கள் வாழக்கூடியன என்பதை மெய்ப்பிக்க விஞ்ஞானிகள் முயன்று வருகிறார்கள்.

*** சில விநாடிகளிலேயே முழுத்தாடை எலும்பையும் X-கதிர் மூலம் படமாக்கக் கூடிய புதுவகைக் கருவியொன்று இன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு தனிப்படமொன்றில் முழுத்தாடை எலும்பையும் பல்வரிசையையும் படமாக்குவதன் மூலம் பல்வைத்தியர்களுக்கு உதவவிருக்கும் இக்கருவியின் இன்றைய விலை 3,800 டாலர்கள்.

*** லண்டன், மருத்துவ விஞ்ஞானிகள் செயற்கை ஈரல் ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட ஈரல் குணமடையும் வரை இச்செயற்கை ஈரல் அதற்கான செயலியக்கங்களை ஒழுங்காக மேற்கொள்ள வல்லதாம். குருதியிலுள்ள எண்ணெய் மற்றும் உணவுப்பொருட்களை இயற்கை ஈரல் வடிகட்டுவதைப் போலவே, செயற்கைஈரலும் தொழிற்படும் என்று பிரித்தானிய விஞ்ஞானிகள் சொல்லியிருக்கிறார்கள்.

*** இங்கிலாந்தில், லங்காஷயரைச் சேர்ந்த சிறுவன் ஒருவனின், பிறவியிலிருந்தே நோய்வாய்ப்பட்டிருந்த குருதியின் வெண்குருதிக் கலங்களை மாற்று சிகிச்சை மூலம் அகற்றியிருக்கிறார்கள் பிரித்தானிய வைத்தியர்கள். உலகிலேயே முதல் தடவையாக நடாத்தப்பட்ட இம்மாற்றுச் சிகிச்சை வெற்றிகரமாக நடந்தேறியிருக்கிறது. உடலின் தொற்றெதிரியாக இயங்கும் குருதிக் கலங்கள் நோய்வாய்ப் படுவதன் மூலம், உடல் அடிக்கடி தொற்றுநோய்களுக்கு இலக்காகலாம். லங்காஷயர் சிறுவனின் நான்கே வயதான சகோதரனின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட வெண்குருதிக்கலங்களே இம்மாற்றுச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்பட்டனவாம்.

*** அணுசக்தி ஆராய்ச்சிக் கழகங்களில் சேரும் கதிர் வீசும் உலோகங்களைக் கொண்ட கழிவுகளை அண்ட வெளிக்கு அனுப்பிவிடுவதன் மூலம், புவியில் அக்கழிவுகளை தாக்க முறுது செய்யும் எண்ணத்தை அமெரிக்காவின் 'நாஸா' நிறுவனம் கைவிட்டுள்ளதாம். இத்திட்டம் கைகொள்ளப் பட்டிருந்தால் 1990ல் மட்டும் நாளொன்றுக்கு ஒவ்வொரு விண்கலம் கழிவுப்பொருட்களை விண்ணிற்குக் கொண்டுசெல்லவேண்டியிருக்கும் என்று நாஸாவின் அறிக்கை தெரிவித்துள்ளது. இக்கழிவுகளை அண்டவெளியில் கலந்து விடுவதன் மூலம், புவி உட்பட மற்றைய கிரகங்களும் எவ்வாறு பாதிக்கப்படும் என்பதைத் தீர்மானிப்பதும் கூட தற்போது இயலாத செயல்; காரணம் கதிர் வீசும் கழிவுப் பொருட்கள் எவ்வாறு சூழலிலிருந்து காக்கப்படும் என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் அவ்வறிக்கை தெரிவித்துள்ளது.

*** குழந்தைகள் பிறந்தவுடனேயே அழும் விதங்களிலிருந்து அவர்களுக்குள் ஒழிந்திருக்கக் கூடிய வியாதிகளை முன்னதாகவே கண்டு பிடிக்க முடியுமாம். சான் பிரான்சிஸ்கோ மருத்துவமனையில் இரு வைத்தியர்கள் அழும் விதங்களுக்கும் வியாதிகளுக்கும் சம்பந்தம் இருப்பதாக தாம் நடத்திய ஆய்வுகளிலிருந்து கண்டுபிடித்துள்ளனர். பிரித்தானிய, அமெரிக்க, பின்லாந்து நாட்டு வைத்தியர்கள் சிலர் இது பற்றி மேலும் ஆராய்ச்சிகள் நடத்தவுள்ளனர்.

தொகுப்பு: எம் டி விஜயேந்திரன்
— லண்டன்

# திருக்குறள் THE GREAT KURAL

The family, in the widest sense, has been the unit of society among the Tamils from centuries past to the present day. Valluvar maintains that fulfilment in life results from discharging our obligations frrst to family members and then to society at large. These duties are laid down in the kural - a farther's duty to earn a living, a wife's duty to be chaste, a son's duty to do well and so on. Thus shorn of non-essentials, life is duty.

> I slept and dreamed that life was beauty
> I woke up and found that life was duty. - Hooper

The great Tamil epic, Silapathikaram, is a literary monument for a chaste wife, Kannaki, later worshipped as the Goddess Paththini:-

> What we sowed returns, the good and evil
> To king and peasant alike it will
> Even the renowned sceptre the proud Pandyan bears
> crumbled at the just claim of a chaste wife's tears.
> - Silapathikaram
> (transl: K.G)

Ilanko Adigal reiterates Valluvar's praise of the force and power of chastity which can confront and excel even the might of kings.

## PART I - SECTION 6

### The Ideal Wife

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

கொண்ட கணவனையே உள்ளம் நிறைந்த தெய்வமென்று கருதுபவள்
தான் பெய்யென்றால் மழையும் பெய்யும் என்பதாம்.

Transl: Rever the husband alone. why pray? refrain!
Chastity can command the heavens to rain! (K.G)

Expl: The force and power of chastity is praised almost to the heavens who it is said will literally obey the commands of such a chaste wife with rain.

## SECTION 7

### Dutiful Children

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்

ஒருவன் தனது தந்தைக்குச் செய்யும் கடமை, தான் நற்பெயர்
பெற்றுப் பிறர் தனது தந்தையை மெச்சும்படி செய்தலாம்.

Transl: The son owes a duty earning such good name
Society will exclaim: this his father's fame! (K.G)

Expl: By the achievement of ability and merit on himself, a dutiful son will unwittingly bring happiness to his father whom society will then regard highly.

**CURRY INN**

233 HAYDONS ROAD, WIMBLEDON, LONDON, S.W.19.
TELEPHONE: 01-540 0704

CHOICE READY-COOKED INDIAN FOODS TO TAKE AWAY
OPEN FROM: 12 NOON to 2 p.m. and 5 p.m. to 11.30 p.m.
CAR PARKING ALWAYS AVAILABLE

இந்தியக் கைத்தறி ஆடைகளையும்
இந்தியப் பண்டங்களையும் பிரான்ஸில்
தருவித்து விற்பனை செய்பவர்.

**ALYMARECAR**

Vêtements Exotiques

No 5 Bois du Temple-App. :5051

93390 CLICHY SOUS BOIS

(FRANCE)

விற்பனை விசாரணைகள் வரவேற்கப்படும்.

**PERSONAL EXPORT**

**DISCOUNTS OF 20% ON**

SEWING MACHINES—TAPE RECORDERS—
RADIO AND PHOTOGRAPHIC GOODS

**FELL OF LONDON**


342 COLDHARBOUR LANE
BRIXTON, S.W.9
01-733 4576


Radio and T.V.
Refrigerators
Washing Machines
Tape Recorders
Sewing Machines
Typewriters
Seiko Watches
Photographic equipment
Hi-fi, Triang Toys
Parker Pens
Air Conditioners
and Dictating Machines





பாரதீய வித்யா பவனத்தினர் லண்டனில் நிலையம் ஆரம்பித்து இம்மாதம் ஓராண்டு பூர்த்தியாகின்றது. மேலேயுள்ள படங்களில் இடது: ராமாயண சொற்பொ ... திரு. மாதூர் கிருஷ்ணமூர்த்தி






சென்ற ஆண்டு பாரதீய வித்யா பவனத்தை திறந்து வைக்கின்றார் திருமதி முன்ஷி அவர்கள். இடது கோடியில் பவனின் பொது செயலாளர் திரு இராமகிருஷ்ணன் அவர்கள். வலது படம்: யோகாசன நிபுணர் அய்யங்கார் யோகாசன நிகழ்ச்சியின் போது.



பீ பீ சி தமிழோசை நிகழ்ச்சியில் ஷேக்ஸ்பியரின் கிங் லியர் நாடகத்தை தயாரித்து அளித்துவருகின்றார் திரு சங்கர் சங்கர மூர்த்தி அவர்கள். இங்கு அவரும் தமிழோசை புகழ் ஆனந்தி சூர்யப்பிரகாசமும் ஷேக்ஸ்பியர் சிலை அருகே வாசகர்களுக்கு அளிக்கும் ஓர் காட்சி.



கடந்த மாதம் லண்டனில் பரத—குச்சிப்புடி நடனநிகழ்ச்சியை அளித்தார் செல்வி லட்சுமி விசுவநாதன்.




தமிழக உயர்நீதிபதி திரு கோகுல கிருஷ்ணன் அண்மையில் லண்டன் வந்திருந்தார்.



ஈழத்தமிழகத்தின் விடுதலைக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்து அமரரானார் சிவகுமார்.



லண்டன் கோயா திரு அப்பாவு அவர்கள் அண்மையில் காலமானார்.





தென்னாபிரிக்காவில் நேட்டால் தமிழ் வேதிக் கழகத்தினரால் டர்பனில் தமிழ்ப்புத்தாண்டு விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மேலே: தமிழ் மகளிர்களின் கலை நிகழ்ச்சிகளைக் காண்கிறீர்கள்.




அண்மையில் மோரிஷியஸ் வந்திருந்த கவியோகி சுத்தானந்த பாரதியாருக்கு வரவேற்பு அளித்தனர் வட தமிழ் ஐக்கிய சங்கத்தினர்கள். பின்னல் நிற்பவர்கள்: இராசன் செட்டி (செயலாளர்) ஆ பரசுராமன் (தலைவர்) இருப்பவர் இடது: மாண்புமிகு அ வீ செட்டியார் எம் எல் ஏ.



லண்டன் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் துணைச்செயலாளர், பொறியியலாளர் திரு ராஜகோபாலுக்கும், செல்வி பஞ்சநிதிக்கும் திருமணம் கோலாலம்பூரில் நடந்தேறியது.

## Shree Krishna South India Restaurant

194 Tooting High Street, London, S.W.17
Telephone: 01-672 4250
(Prop: R. Ramanarayanan)
Masala Dosai—Uppuma—Iddly—Vadai—Dahi Vadai—Adai—Avial—Sambar
Rasam—Puri—Chapathi—Paratha
Nearest Tube: Tooting Broadway & Colliers Wood
Catering for Weddings & Parties

**INDIAN NATIONAL TRAVELS LIMITED**
**At your Service since 1930**

LOWEST JET FARES to SINGAPORE.
INDIA, CEYLON, MALAYSIA, FAR EAST.
AUSTRALIA, U.S.A. and CANADA.

**Packing Shipping & Forwarding**
**Export Shopping Service**
25 Bloomsbury Way, London, W.C.1
Telephone: 01-405 1193

TEL: 01 684 8437 TEL: 01 654 5446

## MOHAMEDS

ORIENTAL GROCERS

61 PORTLAND ROAD
SOUTH NORWOOD
LONDON, S.E.25



**LAWNFORD LTD.**
**LEADERS IN QUALITY FASHION FABRICS**
DIRECT IMPORTERS, EXPORTERS,
WHOLESALERS AND RETAILERS.
LARGE STOCKISTS OF:
JAPANESE PLAIN AND PRINTED NYLON GEORGETTE SAREES
AND LUREX BROCADES.
SPECIALISTS IN ENGLISH CURTAIN MATERIALS
ALL THESE AND MANY MORE VARIETIES AVAILABLE AT MOST
KEENEST PRICES.

VISIT US AT
COMMERCE AND INDUSTRY HOUSE
31 MIDDLESEX STREET
ALDGATE, LONDON, E1 7AA
Tel.: 01-247 7129 Cables: YAULEE, LONDON, S.W.19
SITUATED IN THE WORLD FAMOUS PETTICOAT LANE MARKET AREA
UNDERGROUND STATIONS:
ALDGATE, ALDGATE EAST, LIVERPOOL STREET
WAREHOUSE AT 171 ARTHUR ROAD, WIMBLEDON PARK, LONDON, S.W.19
Tel.: 01-946 6914

# கணக்குத் (கடன்) தீர்ந்தது !

வேது பரிசுக் கதை ~ அரங்க முருகையன் [கிரான்லோரீடு, இங்கிலாந்து]

அன்று தைப்பொங்கலுக்கு முந்திய நாள்— போகிப் பண்டிகை.'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற நப்பாசையாலோ என்னவோ, தமிழ்நாட்டுத் தஞ்சை மாவட்டத்தில் உள்ள மாங்குடி என்ற அந்தச் சிற்றூர் விழாக்கோலம் பூண்டிருந்தது. பொக்கை போரையாய் நின்ற சுவர்கள் மண் பூசப்பெற்று பொலிவுடன் விளங்கின. அழுக்கும், ஒட்டடையுமகற்றப்பட்டு வீடுகள் வெள்ளையடிக்கப்பட்டன. மாவிலைத் தோரணங்களும் புது நெற்கதிரும் சில வீடுகளை அணி செய்தன. ஏறத்தாழ எல்லா வீடுகளிலும் மாக்கோலம் இடப் பட்டிருந்தது. சுருங்கச் சொல்லின், அந்தச் சிற்றூரே ஒரு புதுப்பொலிவுடன் இலங்கியது!

இரவு மணி 9தான் இருக்கும். அதற்குள் எல்லா வீட்டுக் கதவுகளும் அடைக்கப்பட்டுவிட்டன. நகரப்புறத்து நாகரீகம் இன்னும் அங்கு பரவாததால், மக்கள் முன்னரே துயிலச் சென்று வைகறையில் எழுந்திருப்பதுதான் அங்குள்ள வழக்கமாயிருந்தது.

எல்லோரும் முடங்கிவிட்ட அந்த நேரத்திலும் — அதிலும், "இதோ வந்தேன், வந்தேன்" என்று மழை கட்டியங் கூறுவதற்கென தன் தூதுவர்களான இடியையும் , மின்னலையும் விட்டு மக்களைப் பயமுறுத்திக் கொண்டு இருக்கையிலும் — மார்கழித் திங்களின் குளிர் குறையாத அந்த நேரத்திலும்கூட ஓர் உருவம் ஊர் எல்லையைக் கடந்து, நாய்களின் குரைப்புக்கிடையே, ஒற்றையடிப்பாதை வழியாக வயற்புறத்தைநோக்கி நடந்தது!

காரிருளில் ஒற்றையடிப் பாதையிலும் வயல்வரப்பிலும் நடப்பது இலகுவா என்ன? ஓரிருமுறை தவறி விழுந்ததையும், காலில் காயம் பட்டதையும் பொருட்படுத்தாமல் , உடல் களைத்துத் தளர்ந்திருந்தாலும் உள்ளத்தால் தளரா ஊக்கத்தோடு விரைந்து நடக்கும் அந்த விந்தை மனிதன்தான் முத்து! நம் கதைத் தலைவன்! அவனைப் பின்தொடர்வோம்.

என்ன இது? ஊர் எல்லையைக்கடந்து வெகுதூரம் வந்துவிட்டானே! "இதோ வந்தாகிவிட்டது, இன்னும் கொஞ்ச தூரம்தான்!" என்று தானாகவே முனகியபடி நடப்பதைப்பார்த்தால் தூக்கத்தில் நடப்பதைப் போலவும் தெரியவில்லை. தூக்கத்தில் நடக்கக் கூடியவனுமல்ல முத்து! ஒருவேளை மாங்குடி மக்களில் பலர் பேசிக் கொள்வதைப்போல வயிற்றுக்குக்கூட நன்கு சாப்பிடாத கருமியான அவன் தன் பணத்தை எல்லாம் புதைத்து வைத்திருக்கும் இடத்தை நோக்கிப் போகிறானோ?

இதோ அவன் நடை விரைவு பெறுகிறது. ஐம்பது அகவையை நெருங்கிவிட்ட அவன் இருபது அகவை இளங்காளையைப் போல ஓடுகிறான்! காலில் முள் குத்துவதும், ஆந்தை அலறுவதும்கூட அவனுக்குத் தெரியவில்லை! இதுதான் அவன் வந்து சேரவேண்டிய இடம்போல் இருக்கிறது, நின்று நிதானிக்கிறான். அவன் கண்களில் நீர் வழிகிறது. துடைத்துக்கொண்டே வரப்பினின்றும் கீழே வயலில்—வயலா அது? பல ஆண்டுகளாகப், பண்படுத்தப் பட்டதாகவே தோன்றவில்லையே! எங்கும்புல் பூண்டும் கோரையும் மண்டிக் கிடக்கின்றன. அவையெல்லாம் அசைவது அவனை "வா, வா" என்று வரவேற்பதைப் போல் அவனுக்குத் தோன்றிற்றோ என்னவோ, "இதோ வந்து விட்டேன். உங்களை மீட்டு விட்டேன். என்னுடைய உயிர், உடமை நீங்கள்!" என்று ஆவேசம் வந்தவனைப்போல் கத்துகிறான்! குனிந்து தரையை முத்தமிடுகிறான்! கோவிலில் திருநீற்றை உள்ளுணர்வோடு பெற்றுக் கீழே சிந்தாமல் நெற்றியில் இட்டு உச்சந்தலையில் தெளித்துக் கொள்ளுகிறோமே, அதே போல அந்த வயல்மண்ணை எடுத்து நெற்றியில் பூசிக் கொள்ளுகிறான்! உச்சியில் இட்டுக் கொள்ளுகிறான்!



பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்கவேண்டியவன் நம் கதைத் தலைவனாகவந்து தொலைத்தானே என்று அலுத்துக் கொள்கிறீர்களா? முத்து பைத்தியமல்லன்! எத்தனையோ நல்லவர்கள், பெரியவர்கள் உலகினரால் அரைப் பைத்தியமென எள்ளி நகையாடப்படவில்லையா; அதேபோன்ற விந்தை மனிதன்தான் நம் முத்துவும்!

இதோ அவனுக்கு மேலெல்லாம் வியர்க்கிறது. மேற்துண்டால் துடைத்துக் கொள்ளுகிறான். இப்போதுதான், நடந்துவந்த களைப்பு அவனுக்குத் தெரிகிறது. வரப்பின் மீது உள்ள விளா மரத்தின்மீது சாய்ந்தபடி உட்கார்கிறான். சட்டைப் பையில் மடித்துவைத்திருந்த காலத்தால் பழுத்துப் போன தாளை — பத்திரம் போல் தோன்றுகிறது— தன்முன் விசிறி (வயலுக்கு)க் காட்டி, "கடனைத் தீர்த்து மீட்டுவிட்டேன், மீட்டுவிட்டேன்!" என்று மறுபடியும் கரடியாய்க் கத்துகிறான்.

அவன் குரல் வயலுக்குக் கேட்டதோ என்னமோ? ஆனால் மழை, அவன் தனக்குத்தான் சவால் விடுக்கிறானோ என்று எண்ணித் தன் தூற்றல்களைவிட்டு அவனை வேடிக்கை பார்க்கத் தொடங்கியது. "மழை பெய்யத் தொடங்கிவிட்டதே, வீட்டுக்குப் போவோம்!" என்றெண்ணாமல், வானத்தை ஒரு முறை வெறிக்கப் பார்த்துவிட்டு நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்துவிடுகிறான். துண்டைத் தலையில் காப்பாகப் போட்டுக் கொள்கிறான். அவன் மனத்திரையில் பழங்கால நிகழ்ச்சிகள் நிழலாட்டம் வரத் தொடங்கின....

⊕ ⊕ ⊕ ⊕ ⊕

முத்து பிறந்த சில நாட்களிலேயே தாயையிழந்துவிட்டான். தாயற்ற அவனுக்குத் தாயும் தந்தையுமாகஇருந்து வளர்த்தார் அவன் தந்தை நல்லசிவம். உள்ளூர்ப் பள்ளித் தலைமையாசிரியரான அவர் கண்ணியமான மனிதர். எல்லோர்க்கும் நல்லதே செய்யவேண்டுமென்று எண்ணியவர், பொறுமைசாலி. மற்றவர் துன்பத்தைத் தன் துன்பமாக ஏற்கும் இயல்பினர். ஏழை மக்களிடம் பற்றும் பாசமும் கொண்டவர். இன் முகத்தவர். பள்ளிக்கூட நேரம்போக எஞ்சிய நேரத்தில் அவர் வீட்டில் எப்போதும் கூட்டம். கடிதம் எழுதுவதற்கும், ஆலோசனை கேட்பதற்கும் பலர் கூடிக்கொண்டேயிருப்பார்கள். சலிப்பின்றி எல்லோர்க்கும் தன்னாலானதைச்செய்வார். ஆரம்பப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு பக்கத்து நகரத்திலுள்ள உயர் பள்ளிக்குச் செல்ல பணவசதி இல்லாது தவிக்கும் மாணவர்க்குத் தானே பணமும் வழங்குவார்.

முத்துவுக்கு வினவு தெரிந்த நாளாய் அவன் வீட்டில் எப்போதும் நாலுபேர் இருந்துகொண்டே இருப்பார்கள். அந்த ஊரிலேயே ஒரு முக்கிய புள்ளியாக முத்துவின் தந்தை விளங்கினார். முத்துவை, அவன் விரும்பும்வரை, படிக்க வைக்கப் போவதாக தன் நண்பர்களிடம் அவர் பலமுறைசொன்னது இன்னமும் அவனுக்கு நன்றாக நினைவிருக்கிறது. அதற்காக காப்புறுதி(இன்சூரன்ஸ்) ஏற்பாடுகளும் செய்திருந்தார்.

மனிதன் நினைப்பது போலவே எல்லாம் நடந்துவிடுகிறதா? ஒருநாள் உடம்புவலி, காய்ச்சல் என்று படுத்த நல்லசிவம் பிறகு எழுந்து நடமாடவேயில்லை. நச்சுக் காய்ச்சல் என்று உள்ளூர் மருத்துவர் கூறினார். இரண்டு, மூன்று, நான்கு வாரங்களாயின. காய்ச்சல் தணிந்தது. ஆனால் கால்களைத் தான் முடக்கிவிட்டது. பட்டணத்திலிருந்து நிபுணர் வரவழைக்கப்பட்டார். அவரும் தன்னாலானதைச் செய்தார். ஆனால், முடிவு? கூற்றுவன் அவர் உயிரைக் கொண்டே போனான்! முத்து அனாதையானான். முத்துவின் எதிர் காலத்துக்கென்றே விட்டு வைத்திருந்த புன்செய் நிலத்தின் மீதும் நிறையக் கடன்வாங்கி மருத்துவச் செலவுகள் செய்தாகிவிட்டது. பணக்காரர் பலர் மருத்துவச் செலவைத் தாம் ஏற்கவந்தபோதும் இணங்கவில்லை நல்லசிவம்.

'தருமம் தலைகாக்கும்' என்பார்கள். நல்லசிவம் செய்த பல உதவிகளைப்பெற்ற தச்சுப் பட்டறை சாமிநாதன் முத்துவை அழைத்துப்போய் அடைக்கலம் தந்தார். அதற்குப் பின் முத்து பள்ளிசெல்லவில்லை. தச்சுப் பட்டறையில் தேவையான கருவிகளைச் சித்தப் படுத்துவான். ஏவல்களைச்செய்வான். ஒருசில ஆண்டுகளில் தச்சுவேலையிலும் ஓரளவுதேர்ந்து விட்டான்.

முத்து இருபது அகவை நிரம்பப்பெற்ற இளங்காளையாகி விட்டான். இளைஞர்களை இயல்பாக ஈர்க்கக் கூடிய சினிமா, கேளிக்கைகள், இளம்பெண்களின் நட்பு ஆகியவை முத்துவை அண்டவில்லை. மாறாக அவன் உள்ளத்தே கற்க வேண்டும், நிறையக் கற்கவேண்டும் என்ற வேட்கைத் தீ கொஞ்சமும் தணியாமல் கொழுந்து விட்டெரிந்தது. மாங்குடியில் பஞ்சாயத்து, அரசினர் நூல்நிலையம் திறக்கப் பட்டது. அதற்குப் பெருமுயற்சி செய்தவனே முத்துத்தான்! அதன் பிறகு முத்துவின் ஓய்வு நேரமெல்லாம் அங்கேதான் கழிந்தது. அவன் படிக்காத புத்தகமில்லை. பள்ளியில் பயிலவேண்டியதனைத்தையும் நூல்நிலையத்திலேயே கற்றுவிட முடிவு செய்து விட்டானோ, என்னவோ?

அவ்வாறு புத்தகமொன்றைப் படிக்கும் பொழுதுதான் அவன் வாழ்க்கையில் குறிக்கோள் ஒன்று ஏற்பட்டது. பழங்காலத்தே வாழ்ந்த தமிழர்கள் தாங்கள் பட்ட கடன்களைத் தீர்த்த பின்னரே பண்டிகை, விழா போன்றவற்றைக் கொண்டாடுவார்களாம். "பழங்காலத் தமிழரைப் போல், நானும் என் தந்தை அடகுவைத்த நிலத்தை மீட்ட பின்னரே பொங்கல் போன்ற விழாவினைக் கொண்டாடுவேன்" எனச் சூளுரைத்தான். அதன்பின் முத்துவின் நடவடிக்கைகளில் பெரும் மாற்றம் தெரிந்தது.

எளிய உணவையே உண்ணுவான். உடைகள் நைந்து தாறுமாறாகக் கிழிந்துபோகும்வரை அவற்றைவிடமாட்டான். பல கல்தொலைவு செல்லவேண்டிய போதும் பேருந்தில் போகாது நடந்தே சென்று காசை மிச்சம் பிடிப்பான்.

தச்சுப்பட்டறை உரிமையாளர் சாமிநாதனுக்கு வயதாகிவிடவே அவர் பட்டணத்தில் உள்ள தன் பிள்ளைகளிடம் போய்விட்டார். போகுமுன் தச்சுப் பட்டறையை முத்துவுக்கே உரிமையாக்கி விட்டுத்தான் சென்றார். தான் வளர்த்து ஆளாக்கிய முத்து தச்சுத் தொழிலில் திறம்பட விளங்குவது கண்டு அவர் பெரிதும் மகிழ்ந்தார்.

தச்சுப் பட்டறை தனக்குரியதானதும் இரவு பகலாக முத்து உழைத்தான். எளிய உணவும், கடின உழைப்பும் அவன் உருவத் தோற்றத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. கண்களில் குழி விழுந்தது. முதுகில் சற்றுக் கூனல் தெரிந்தது. சுருங்கச் சொன்னால் அவன் அகவையைவிட பத்துப், பதினைந்து வயது முதிர்ந்தவனாகத் தென்பட்டான். இங்கும் அங்கும் கிழிசலான உடை வேறு! வெளிப்படையாகச் சொன்னால், முத்துவை இளந்தலைமுறையினர் கருமி என்றும், வாழத் தெரியாத அப்பாவி என்றும், அரைப் பயித்தியம் என்றும் அவன் காதுபடவே சொன்னார்கள்.

ஆனால் அதையெல்லாம் முத்து பொருட்படுத்தவே இல்லை. தான் மேற்கொண்ட குறிக்கோளுக்காகவே வாழ்ந்தான் — உழைத்தான்.

இரண்டாம் உலகப் போர் வந்தது. இந்தியா விடுதலை பெற்றது. அறிவியல் துறையில் புதுக்கருவிகள்— மாந்தர் பலர் உழைப்பை உறிஞ்சக் கூடியவை— பல வந்தன. முத்து போன்ற கைத் தொழிலாளியின் மதிப்பும் சம்பாத்தியமும் வெகுவாகக் குறைந்தது.

# இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில்....

1973 புரட்டாதித் திங்களில் இங்கிலாந்தின் தொலைக்காட்சியில் (World in Action ) மூலமும் , The State of Tea என்னும் கட்டுரை வாயிலாகவும் இலங்கையின் மலையக மக்களின் அவலநிலையை உலகறியச் செய்தார் செல்வி எடித் பொனண்ட் அவர்கள். உலக மக்கள் அதிர்ச்சியுற்றனர். நிகழ்ச்சியின் சாரம் காற்றோடு சென்றுவிட்டாலும் அண்மையில் தென்மேற்கு லண்டன், மேர்ட்டன் தொகுதி உலக விருத்தி இயக்கத்தினர் (Action for World Development-Merton ) அதனை மறந்து விடவில்லை. ஜூன் 5ந் தேதியன்று விம்பிள்டன் கம்யூனிட்டி சென்டரில் நடைபெற்ற உலக விருத்தி இயக்கத்தினரின் கூட்டத்தில் செல்வி பொனண்ட் சமுகம் அளித்து உரையாற்றினர். அவரின் உரையின் சாரம்சத்தை இங்கே அளிக்கின்றோம்.

இலங்கையின் தோட்டத் தொழிலாளிகளின் மொழிப் பிரச்சினை, குடியுரிமைப் பிரச்சினை, வீட்டு நெருக்கடிப் பிரச்சினைகளை மிகவும் தெளிவாக எடுத்துக் கூறினர். ஒரு குடியில் புதிதாகத் திருமணம்புரிந்த இளம் தம்பதிகள் உட்பட 16 பேருக்கு மேல் வாழுகின்ற பரிதாபகரமான நிலையையும் எடுத்துக் குறிப்பிட்டார். பெரும் பான்மையானோர் போசாக்கு குறைவுள்ள உணவு உட்கொள்ளுவதையும் எடுத்துக் குறிப்பிட்டார்.

மலையக மக்களின் துயரம் நிறைந்த வாழ்வைத் தான் புகைப்படமாகவும், திரைப்படமாகவும் தயாரிக்கும் போது தேயிலைத்தோட்ட உரிமையாளர்கள் தனக்கு மூன்று நாட்களாகத் தொடர்ந்து கொடுத்த இடைஞ்சல்களையும் அவர் எடுத்து விளக்கினர். தொழிலாளர்களின் யூனியன்கள் அளித்த ஒத்துழைப்பிலேயே அவர் தனது பொருட்களைப் பாதுகாக்க முடிந்தது எனவும் தெரிவித்தார். இங்கிலாந்து இலங்கையிடம் இருந்து அதிக தேயிலையை கொள்முதல் செய்வதைக் குறிப்பிட்டுக் காட்டிய அவர் மலையக மக்களுக்கு இங்கிலாந்து நேசகரம் நீட்டவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர்.

இங்கிலாந்து வாழ் தமிழர்களே இலங்கையின் மலையக மக்களின் அவல நிலையைப் போக்க நீங்கள் ஒவ்வொருவரும் உங்களால் இயன்றதைச் செய்ய முன்வாருங்கள். இலங்கைத் தேயிலையை மக்கள் வாங்கும்படி ஊக்கம் அளியுங்கள். முடிந்தால் உங்கள் ஊற்றார், உறவினர், நிறுவனங்கள் மூலம் மலையக மக்களுக்கு பொருளுதவி அனுப்பி வையுங்கள். The State of Tea என்னும் மலரை 35p வாங்கிப் படியுங்கள். மேர்ட்டன் தொகுதி உலக அபிவிருத்தி இயக்கத்தின் அடுத்தகூட்டம் விம்பிள்டன் கம்யூனிட்டி சென்டரில் (St Georges Road, London SW19 ) ஜூலை 15 திங்கள் 8மணிக்கு நடைபெறுகின்றது. அதற்கு வருகை தாருங்கள். இன்னும் இப்படியான கூட்டங்களை ஆங்காங்கே நடத்துவத்ற்குஆவன செய்யுங்கள். உழைக்கும் மக்கள் யாவரும் ஒருவர் பெற்ற மக்களே

Secy, Action for World Development(Merton)
36 Melrose Avenue, London SW19.

கிறிஸ்துவ தமிழ் இளைஞர் கழக
தோழன்- அ மகேந்திரன் சேவியர்
(லண்டன்)

# தொண்டமானுடன் பேட்டி.

இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில் தொழில் புரிந்து வாழும் பாட்டாளி மக்களுக்கு என தொழிற் சங்கங்கள் சில உள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமானதும் பலம் வாய்ந்ததுமான தொழிற்சங்கம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகும். ஆசியாவிலேயே மிகக் கூடிய அங்கத்தினர்களைக் கொண்ட இத் தொழிற்சங்கத்தின் தலைவர் திரு சௌ தொண்டமான் அவர்கள் இம்மாதம் ஐரோப்பா வந்திருந்தார். ஜெனிவாவில் நடைபெற்ற அனைத்துலக தொழிற்சங்க கூட்டுச் சம்மேளன மாநாட்டில் பங்குபற்றுவதற்காகவே அவர் இங்கு வந்திருந்தார். மாநாடு ஜூன் 3 — 4ந் தேதிகளில் நடைபெற்றது. லண்டன் முரசுக்கு அவர் பிரத்தியேகமாக அளித்த கருத்துக்களை இங்கே அளிக்கின்றோம்.



வெளிநாடுகளில், சிறப்பாக அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து நாடுகளில் வாழும் தமிழர்கள் இலங்கைத் தேயிலைத் தோட்டத்தொழிலாளர்களின் நிலை குறித்து கொண்டுள்ள அனுதாபத்திற்கு நன்றி தெரிவித்த திரு தொண்டமான் அவர்கள் தமிழ் மக்கள் அனுதாபத்துடன் மட்டும் நின்று விடாது, அந்நிய நாட்டைச் சேர்ந்தவரானலும், செல்வி எடித் பொனண்ட் அவர்கள் செய்யும் சேவையை ஒத்து நமது தமிழர்களும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கூறினர். யூதர்களைப் போன்று தமிழர்களும் ஒருமைப்பாட்டுடன் இயங்கவேண்டும் என்றார். தமிழர்கள் அனைவரும் ஒருமித்தபடி ஐ நா நிறுவனங்கள், War on Want, Oxfam ஆகிய நிறுவனங்கள் மூலம் இலங்கைத் தோட்டத்தொழிலாளர் நிலைகுறித்து ஆவன செய்ய முயற்சிகள் எடுக்கவேண்டும் என்றார்.

இலங்கையில் தமிழர் கூட்டணி நிலமை பற்றி அவர் பேசுகையில் தமிழர் கூட்டணியினர் தமது திட்டங்களில் முன்னேறுவதற்கு ஒருமித்தபடி செயலாற்ற முழுநேரமாக சிலராவது இயங்க வேண்டும். தற்போது இவர்கள் அனைவருமே அரசியலை பகுதி நேர வேலையாகவே ஆற்றிவருகின்றனர். முழு நேர வேலையாக இயங்குவதற்கு அவர்களுக்கு போதிய வருமானம் இல்லை. இந்த நிலையில் அவர்கள் எப்படி சரிவர இயங்க முடியும் என்ற திரு தொண்டமான் தமிழர் கூட்டணியினருக்கு பொருளாதார ரீதியில் ஆதரவு கிடைத்து அவர்களில் முக்கியமான சிலர் முழுநேர வேலையாக தமிழரின் எதிர்காலத் திட்டங்களை அமுலாக்க செயற்படவேண்டும் என்றார். மன்னரில் அண்மையில் ஏற்பட்ட தேவையற்ற தோல்வியை இதற்கு உதாரணமாக அவர் எடுத்துக் காட்டினர்.

அனைத்துலக தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தில் திரு தொண்டமான் நாடற்ற தொழிலாளர்களின் உரிமைகள் பற்றிய கட்டுரை ஒன்றை சமர்ப்பித்தார். அத்தோடு அனைத்துலக தொழில் நிறுவனத்தின் (I L O) நிர்வாகக் கூட்டத்திலும் கலந்து கொண்டார். இலங்கையின் மிகப் பெரிய தொழிற்சங்கத்தின் (401 000அங்கத்தினர்) தலைவரான திரு தொண்டமான் 1972 வரை 20 ஆண்டுகளாக இலங்கையின் பிரதிநிதியாக அ தொ நி (I L O) மாநாட்டில் கலந்து வந்தார். ஆனல் 1972 முதல் இலங்கை அரசு 20,000அங்கத்தினர்களைக் கொண்ட CTUF என்னும் கம்யூனிஸ்டு தொழிற்சங்கத்தின் பிரதிநிதியான திரு மென்டிஸ் என்பவரையே அனுப்பிவருகின்றது என்றார். இந்த நிலையை மாற்றி இ தொ கா விற்கு பிரதிநிதித்துவத்தை அளிக்கும்படி தான் விண்ணப்பித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனாலும் முத்து முன்வைத்த காலைப் பின் வைக்கவில்லை. தேவைப்பட்ட பணத்தைச் சேர்த்துவிட்ட அவன் பட்டணம் சென்று தன் முதலாளி சாமிநாதனின் ஆசிபெற்று, பட்டணத்திலேயே நிரந்தரமாகக் குடியேறிவிட்ட பெரிய பண்ணை பெரியநாயகம் பிள்ளையிடம் தன் தந்தை பட்ட கடனைத் தீர்த்து நிலத்தை மீட்க வந்திருப்பதாகக் கூறியதைக் கேட்டு அவர் வியப்பிலாழ்ந்து போனார். அவனுக்கென சிறப்பான விருந்து வைத்தார். அசல் தொகையை மட்டும்தந்தால் போதுமென்றார். முத்து வட்டியும் தருவதாக வலியுறுத்தவே, வட்டியில் 90 விழுக்காடு தள்ளுபடி செய்து, கணக்கை நேர் செய்து நிலப் பத்திரங்களை முத்துவிடம் வழங்கினார்.

பட்டணத்திலிருந்து திரும்பி வந்ததும் வராததுமாக தனக்கே உரிய நிலத்தைப் பார்க்கவே முத்து இவ்வளவு விரைவாக வந்தான். குழந்தையிடம் பேசுவதைப் போல நிலத்திடம் பேசுகிறான். இதோ மழையும் வந்துவிட்டது. கொட்டும் மழையும் குளிரும் அவனுக்குத் தெரியவில்லை. நிலத்துடன் அப்படி ஒன்றிப் போயிருக்கிறான்!

இரண்டு நாட்களாக வேளாவேளைக்குத் தக்க உணவின்றி புகைவண்டியிலும், பேருந்திலும், கால்நடையாகவும் பல் கல் தொலைவு பயணம் செய்த அவனை அசதி உறக்கத்தில் ஆழ்த்தியது. ஆம்; கொட்டும் மழையொலியே தாலாட்டாக, வரப்பே பஞ்சணையாகக் கொண்டு உறங்குகிறான் அவன்!

இதோ, பொழுதும் விடிந்துவிட்டது. இதென்ன!.. வைகறை நான்கு மணிக்கே எழுந்திருப்பவன் முத்து. இன்னமும் தூங்குகிறானே!. அவன் உடலில் அசைவையோ, மூச்சையோ காணோமே!!

வெகுநேரம் கழித்து அந்தப் பக்கம் வந்த இருவர் "நல்ல நாளும் அதுவுமாய் பாவிப் பயல் செத்துத் தொலைத்திருக்கிறான்!" எனவும் "விளாமரத்து முனி வழக்கம் போல காவு வாங்கிவிட்டது" எனவும் சொன்னார்களே தவிர முத்துவின் சிறப்பான குறிக்கோளைப் பற்றியோ கடன் தீர்க்கப் பட்டதைக் காட்டும், காலத்தால் பழுப்பு ஏறிப்போன, தாளைப் பற்றியோ எண்ணவில்லை. பாவம்!

## சிறப்புநாட்குறிப்பு

| மாதம் | நாள் | சிறப்பு | விடுமுறை |
|---|---|---|---|
| ஜூன் | 30 | வங்கி விடுமுறை | தமிழ்நாடு, இலங்கை |
| ஜூலை | 4 | பௌர்ணமி விடுமுறை | இலங்கை |
| | | அமெரிக்க தேசிய தினம் | அமெரிக்கா |
| ஜூலை | 14 | பிரெஞ்சு தேசிய தினம் | பிரான்சு |
| ஜூலை | 19 | கதிர்காமம் கொடி | — |
| | | ஆடி அமாவாசை | — |
| ஜூலை | 23 | ஆடிப் பூரம் | — |
| ஜூலை | 24 | யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கொடி | — |
| ஜூலை | 26 | சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை | — |




# OVERSEAS TRAVEL CONSULTANTS

CONSULT US FOR ECONOMY FARES TO **Colombo**

**O.T.C.**

**01- 675 1415** (LONDON)
(9.00 am to 5.00 P.M)

**MADRAS INDIA**
**RESTAURANT**

*South Indian Food Speciality*
Open 12 to 3 p.m.
and
6 p.m. to midnight

325 GRAY'S INN ROAD, W.C.1
100 yards from Kings Cross Station

*Speciality:*
IDDLY
VADAI
MASALA DOSAI
SAMBAR
RASAM, etc

Res: 01-837 4544

**Teasdale** (BROS) **SIGNS**
01 : 542 7035 & 7764

முகப்புக்கள் , அட்டைகள் , வாகனங்கள்
இவற்றில் சிறந்த முறையில் விளம்பரங்கள்
எழுதுமிடம்.

FOR FACIAS, BANNERS, VEHICLES
& ALL TYPES OF HANDWRITTEN SIGNS
247 KINGSTON ROAD, LONDON SW19 3NW

# வெளிநாடுகளில்.....

## தமிழ் - தமிழர் பற்றிப் பரவப்படும் தப்பான தகவல்கள் - I

வெளிநாடுகளில், குறிப்பாக மேற்கு நாடுகளில் தமிழ் — தமிழர் பற்றி ஏறுக்கு மாறான தகவல்கள் தெரிந்தோ, தெரியாமலோ அவ்வப்போது வெளியிடப்படுவதை நாம் அறிவோம். இத்தகைய வெளியீடுகள் சில அனைத்துலகத் தரம் வாய்ந்தவையாகவும் இருக்கின்றன. சில தப்பான தகவல்கள் நம் நாடுகளின் சில நிறுவனங்களால் தெரிந்துகொண்டே வெளியிடப்படுவதையும் நாம் அறிவோம். தமிழ் — தமிழர் பற்றி வெளியிடப்படும் தப்பான தகவல்களுக்கு அவ்வப்போது எதிர்ப்புத் தெரிவித்து, உண்மையை உலகறியச் செய்தால், அது மேற்கு நாடுகளில் வாழும் நாம் தமிழுக்கும், தமிழருக்கும் செய்யக்கூடிய ஒரு சீரிய தொண்டாகவே கருதப்படும். இந்தத் தொடரில் முதலில், லண்டன் தமிழ் அறிஞர் திரு அரங்க முருகையன் அவர்கள் ஆய்ந்து எழுதியுள்ள கட்டுரைத் தொடரை நாம் வெளியிடுகின்றோம். தொடர்ந்து, தப்பான தகவல்களை களைவதற்கான வழிமுறைகளும் வெளியிடப்படும். இதற்கான கருத்துக்களை வாசகர்களிடமிருந்து நாம் வரவேற்கின்றோம்.

— ஆசிரியர்.

அண்மையில், லண்டன் தமிழ்ச் சங்க ஆண்டு மலரில் பண்டாரகர் ஆஷர் அவர்கள் எழுதிய 'ஆங்கிலத்துக்கு தமிழ் கடனாக வழங்கிய சொற்கள்' என்ற தலைப்புடைய கட்டுரையைப் படித்து பெரிதும் மகிழ்ந்தேன். தமிழ்ப் புலமை மிக்க அவர் எழுதியுள்ள கட்டுரையில் தமிழின் பொருட்செறிவும், அழகும் ஒருங்கே மிளிர்வது தமிழர்க்கு மகிழ்ச்சி அளிக்கிறதெனினும் நூலகங்களில் அனைவரும் படிக்கத்தக்க நூல்களில் தமிழ்பற்றித் தவறான குறிப்புக்கள் காணப்படல் தமிழர்தம் நெஞ்சைக் கவலுறச் செய்கிறது. அக் குறிப்புக்களாவன:—

<u>பிரித்தானிகா கலைக் களஞ்சியம் தமிழ் பற்றிக் கூறும் குறிப்புக்கள்</u>:—

ஒன்றரைப் பக்கங்களுக்கு மேல் தமிழ் பற்றிக் கூறும் பிரித்தானிகா கலைக் களஞ்சியம் கூறுவதின் சுருக்கமாவது:— "விவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலும் (OLD TESTAMENT), கிரேக்க உரோமானியப் புலவர் பெருமக்கள் எழுதி வைத்துள்ள குறிப்புக்களிலும் காணப்படும் தென்னிந்திய மக்கள், இடங்கள், பொருள்கள் பற்றிய பெயர்கள் தமிழின் தொன்மையை விளக்குவதாக உள்ளன. எனினும், கி.பி.8ம் நூற்றாண்டுக்கு முன்னதாகத் தமிழ்மொழி இலக்கியம்பற்றி எழுத்து வடிவிலான சான்றுகள் இல்லை. தொல்காப்பியம் எட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. பாண்டிய மண்டலம் 9முதல் 13ஆம் நூற்றாண்டு வரை சமண சமய ஈடுபாட்டில் இருந்தபோது ஆக்கப்பட்ட நூல்கள் நாலடியார், மற்றும் குறள் போன்றவை. குறளின் ஆசிரியரான திருவள்ளுவர் ஒரு பறையர்!

தமிழ், பாரசீகம், உருது போன்ற மொழிகளிடமிருந்து ஆட்சித் தொடர்பான சொற்களை ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழ் ஆங்கிலத்துக்கு வழங்கிய சொற்கள் கறி, மிளகுதண்ணீர், சுருட்டு, பறையர்.
தமிழ் ஆங்கிலத்திடமிருந்து பெற்ற சொற்கள் ட்ரீட்டி, பட்லர், ஆக்ட், கிளப், கவர்னர், பீனல்கோடு, சீக்கு, மேஜிஸ்ரேட்."

மேற்கண்டனவற்றுள், பிரித்தானிகா கலைக் களஞ்சியத்தின் தொடக்கப் பகுதி தமிழின் பழஞ்சிறப்பைக் கூறுகின்றதென்பதில் ஐயமில்லை. ஆனால், தொல்காப்பியம், குறள் போன்ற நூல்களை 8ம் நூற்றாண்டுக்குத் தள்ளுவது ஏன்?

இயேசுவின் சீடர்களுள் ஒருவரான தோமஸ் முனிவர் கி.பி.1ம் நூற்றாண்டில் தென்னிந்தியாவுக்கு வருகை தந்து இயேசுமத விளக்கம் செய்தார் என்பதற்கு மேற்கண்ட கலைக் களஞ்சியத்தின் இறுதிப் படலம் சான்று பகரும். அக்காலை அவர் மயிலாப்பூரில் வாழ்ந்த வள்ளுவரோடு அளவளாவி மகிழ்ந்தார் என்பதற்குச் சான்று உண்டு. தோமஸ் முனிவர்மறைந்த இடமே மயிலாப்பூர்தானே!

'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.' என்ற குறள் இயேசுவின், 'ஒரு கன்னத்தில் அடித்தார்க்கு மறு கன்னத்தையும் காட்டுக' என்ற கொள்கைக்கு இணையானதன்றோ! ஆகவே குறள், குறள் கி.பி.1ம் நூற்றாண்டில் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும். தொல்காப்பியம் குறளுக்கு காலத்தால் முந்தியதாயிற்றே! வீரசோழியம் போன்ற பிற்கால இலக்கண நூல்களோடு இணை செய்து பார்க்கப் பட்டமை அ..து கி.பி.8இல் இயற்றப்பட்டது எனத் தவறாக எண்ணப் பட்டது போலும்!

'வள்ளுவர்' என்பதைக் குலப் பெயராகத் தவறாக எண்ணியமையின் அவர் ஒரு பறையர் என்று குறிக்கப் பட்டுள்ளார் போலும்!

தமிழ், பாரசீகம் முதலான மொழிகளிடமிருந்து ஆட்சித் தொடர்பான சொற்களைக் கடனாகப் பெற்று வளமுற்றது என்ற கூற்று தவறன்றோ! பல நூற்றாண்டுகள் சீரிய ஆட்சிசெய்து பட்டறிவு உடைய தமிழ், வேற்று மொழிச் சொற்களைக் கடனாகப் பெறவேண்டி இருக்கவில்லை. அச் சொற்கள் வேற்று மொழியினரால் தமிழில் திணிக்கப்பட்டன என்பதே உண்மை. இக் கூற்று வடமொழிக்கும் பொருந்தும். வடமொழி தமிழுக்கு எண்ணிறந்த சொற்களை வழங்கியது என்பதே பொதுவான (ஆனால் தவறான) கருத்து. மாறாக, வடமொழியிலுள்ள 'வாய்' என்ற சொல் (இது போன்று வேறு எண்ணிறந்த சொற்களும்) தமிழிலிருந்து அங்கு போனதென்பதொன்றே தமிழின் சிறப்பியல்பைத் தெள்ளெனக் காட்டுமே!

மூவேந்தர் பற்றியும், கற்பின் வலி பற்றியும் கூறும் சிலப்பதிகாரம் பற்றிச் சிறுகுறிப்பும் காணேமே! அதைக் கொண்டு ஆராய்ந்தால் அந்நூல் கி.பி.2ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது என்பதைத் தெளிவாக்குமே! இவ்வாறே, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, அகநானூறு, புறநானூறு, கலிங்கத்துப் பரணி போன்ற நூல்கள் பற்றியும் குறிப்பே இல்லையே!

ஆங்கிலம் தமிழிலிருந்து ஏற்றுக் கொண்டதாக 4 சொற்களே (பர். ஆஷர் 1000க்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்களை ஆங்கிலம் ஏற்றதென்கிறார், 60 சொற்களைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்) கூறப்பட்டு இருப்பது ஒரு புறம் இருக்க, தமிழ் ஆங்கிலத்திடமிருந்து பெற்றதாகக் கூறப்படும் சொற்களில் இப்போது வழக்கிலுள்ளவை கிளப், சீக்கு, மேஜிஸ்ட்ரேட் ஆகிய மூன்றுமே. இவற்றுக்கும் (ஏனைய சொற்களுக்கும்) இணையாகப் பொருள்துவல்ல வேறு நல்ல தமிழ்ச் சொற்கள் உள. 'கிளப்' தற்போது உணவகம் என்ற மாறுபட்ட பொருளோடு வழங்கப்படுவது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

<u>'எவ்ரிமேன்' கலைக்களஞ்சியம் தரும் குறிப்புக்கள்</u>:

அடுத்த இதழில் தொடரும்....

---

(அரங்க முருகையன், லண்டன்.)

THE
AKBAR TANDOORI
115 WESTBOURNE GROVE
LONDON. W.2

We specialise in:—
TANDOORI CHICKEN
SHEEK KEBAB
CHICKEN & MUTTON TIKKA
NAN
AND CURRIES

For Reservation—
Tel.: 727 8938/6416

TAKE AWAY SERVICE
AND PARTIES CATERED FOR

Nearest Tube: Notting Hill Gate
Queensway
Bayswater

We Invite You to
Come and Preview
Our Fabulous
Selection in
SAREES
From All Over The World,
Especially Japan



INDIA SARI PALACE INC.

37 East 29th Street
New York, N.Y. 10016
[212] 725-5630
[Closed on Sundays]

2538 West Devon Ave.
Chicago, Ill. 60659
[312] 338-2127
[Closed on Tuesdays]

[Affiliated with India Emporium Ltd., Hongkong]



EXCLUSIVE

BHAVNEETA
NOVELTIES
Sarees

LARGE SELECTION IN SILK,
COTTON AND NYLON SAREES.
ALSO STAINLESS STEEL KITCHEN
UTENCILS AND ALL INDIAN
MUSICAL RECORDS.

4 Tooting High Street
London SW17 0RG
Tooting Broadway Tube
opposite Tooting &
Broadway Markets
Tel. 01 672 4929

2 Westbury Arcade
Westbury Avenue
London N22 6BL
Turnpike Lane Tube
Tel. 01 889 5838

30 Hampstead Road
London NW1 2PH
Warren Street Tube
Euston Square Tube
Tel. 01 387 023

# அன்புள்ள ஆசிரியருக்கு

முதலாவதாக வெளியிடப்படும் கடிதத்திற்கு £1 — 00 பரிசு அனுப்பிவைக்கப்படும்.

## திராவிட மக்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

லண்டன் முரசு தமிழர்களை ஒன்று சேர்க்க மேற்குநாடுகளில் எழுந்த முதல் தமிழ் ஏடு. அதன் வளர்ச்சியும் வாழ்வும் தமிழர்களுக்கே சிறப்பைத் தருவதாகும். ஆனால், அது கடந்த ஆகஸ்டு மாதத்தில் — எம் ஜி ஆர் அவர்கள் லண்டனுக்கு வந்து போனதிலிருந்தே எம் ஜி ஆர் செய்திகளையும், அவரது கருத்துக்களையும் கிண்டல் செய்து வெளியிட்டு வருகின்றது.

எம் ஜி ஆர் ஒரு தனி மனிதரல்லர் ஈழத்தில் கண்டி மாநகரத்தில் பிறந்தவர். சேர இனத்தவர். அவர் திரைப்பட நடிகராயிருக்கலாம். ஆனால், பழக்கத்தாலும் பண்பாலும் வாழ்க்கை அமைப்பாலும் மறைந்த திராவிடத் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வழியில் தமிழர்களுக்கென்று அமைந்த தனிப்பெருந் தலைவர் அவர். ஐந்தரைக் கோடித் தமிழர்களின் மதிப்புக்கும் போற்றுதலுக்கும் உரிய உயர்ந்த மாந்தர் அவர். தமிழகத்தில் அடுத்து ஆட்சி செய்யவிருக்கும் அரசியல் தலைவர். நாளைய தமிழர்களின் தலையெழுத்தை உருவாக்கப் போகும் அச்சாணி அவர். லண்டன் முரசு எம் ஜி ஆருக்கு உரிய மதிப்பளித்து, தமிழக அரசியல் செய்திகளை வெளியிடுவது நல்லது. தமிழர்களின் உரிமைக்காக ஈழத்தில் பிறந்தாலும் தமிழகத்தில் ஓயாது ஒழியாது பாடுபட்டு வரும் ஏந்தல் அவர் என்பதை உணர்ந்து நடுநிலையுடன் எம் ஜி ஆர் பற்றிய செய்திகளை வெளியிடுங்கள். இல்லையேல் , தமிழ்நாட்டிலும், ஈழநாட்டிலும், மலைநாட்டிலும், உலகின் தமிழர் வாழும் லண்டன், பாரிசு ஆகிய இடங்களிலும் வாழும் திராவிட மக்கள் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள்.

சர்செல், பிரான்சு. க பரமசிவன்.

## தமிழ் ஆராய்ச்சியாளர்கள் விடை தருவார்களா

ஏறக்குறைய கி பி ஆறும் நூற்றாண்டின் பின்பு தான் தமிழ்நாட்டில் பக்தி இயக்கம் தொடங்கி தேவார திருவாசகங்கள் பிறந்தன. சிந்து நதிப் பள்ளத்தாக்கில் திராவிட நாகரீகக் கண்டுபிடிப்புகளில் சிவ வழிபாட்டு இலச்சினைகள், சிலைகள் இருந்தும் சைவத்தைப் பற்றி சங்க இலக்கியங்கள் குறிப்பிடாத காரணம் என்ன சிலப்பதிகாரக் காலத்திலும் இந்தக் குறை இருந்ததற்குச் சமணம், புத்தம் ஓங்கிய நிலை காரணமாகலாம். ஆனால் அதற்கு முன்பு முரசின் வாசகப் பெருமக்களை இதற்கு விடை தருமாறு வேண்டுகின்றேன்.

வால்தம்ஸ்டோ, லண்டன் கி 17. அறிவுக்கதிர்.

## ஈழத்தமிழர்களின் துயராற்ற

ஈழத்தில் தமிழர்கள் பசியாலும் பட்டினியாலும் அவதிப்படுகின்றார்கள் என லண்டன் முரசு ஏப்பிரல் இதழில் வாசித்தறிந்தேன் ஆளாத் துயரடைந்தேன். வெளிநாடுகளில் வசதியுடன் வாழும் நாம் ஒவ்வொருவரும் எம்மால் இயன்றளவு நிதியுதவி செய்து அவர்களுக்கு நாம் வாழ்வை அளிக்கலாமல்லவா இத்துடன் எனது அன்பளிப்பாக $10.00 அனுப்புகின்றேன்.

பால்டிமோர், மேரிலாந்து. நிர்மலா பாஸ்கர்.

[illegible] குறிப்பு: திருமதி நிர்மலா பாஸ்கர் அவர்கள் அனுப்பியுள்ள $10.00 பணத்தை ஈழத்தமிழர் நிதியாக வைத்துள்ளோம். அதனைத் தகுந்த நிறுவனம் ஒன்றிற்கு அனுப்பியதும் விவரம் வெளியிடுவோம்.

**London Tamil Educational Society**

— எழுத்தறிவித்தவன் இறைவனாவான் —

A Tamil School is functioning at the Wimbledon Community Centre Hall, St George's Road, London SW19. The classes are conducted between 2 00pm & 4 00pm every Saturday.

**admission & details**

A Vairavamoorthy
5 All Saints Road
London SW19
01-540 7710

K Anandarajah
25 Compton Road
London SW19
01-946 8950

# தென்னாபிரிக்கத் தமிழ் திரைப்படக்கழகம்

# South African Tamil Film Society

*presents to members & guests*

ஜெகபதி ஆர்ட் பிக்சர்ஸ்

# எங்கள் தங்க ராஜா

ஈஸ்ட்மென் கலர்

தயாரிப்பு-டைரக்ஷன் V.B.ராஜேந்திரபிரசாத் B.Sc.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன்
மஞ்சுளா ~ சௌகார் ஜானகி ~ மனோகர்
நாகேஷ் ~ சுந்தரராஜன் ~ சகுந்தலா





சீட்டுகள் : 90p ; 80p;

குழந்தைகள் ½ கட்டணம்

ஜூலை 5, வெள்ளி மாலை 7.30

COMMONWEALTH INSTITUTE,
Kensington High Street, LONDON W8.

FOR TICKETS CONTACT:

MRS. ROHINI KAPUR (TASHIÉ)
47 MORTLAKE ROAD
ILFORD ESSEX
phone: 01-553 3877

MR. V.K. MOODLEY (VICKEY)
117 CARSHALTON ROAD
GOODMAYES
ILFORD, ESSEX
phone: 01-590 4264

# Final Exams

INDIAN ADMINISTRATIVE SERVICE & INDIAN FOREIGN SERVICE EXAMS. SEPT-NOV '73

TOTAL PASSED: 156

BHASKAR BALAKRISHNAN(1442), H VISWANATHAN(4735), GOPALAN BALAGOPAL (4297) , M MADHAVAN NAMBIAR(18606),RAGHU MANON(B0475),MISS THANKAM ANANTAKRISHNAN(2672), DORAISWAMY RAJAGOPALAN(7630), CHANDRASEKHAR BALAKRISHNAN(5347), J PRASAD MURTY (618), VENKATESWARAN RAMNATH(19641), S CHANDRASEKHAR(1112), MISS JANAKI KRISH NAMURTI(4879), VEERARAGHAVAN PAKSHIRAJA(6256), MISS RUKMANI RADHA KUMARAMANGALAM (14516), MISS LALITA KUTTY((14795), A RAMASWAMY(9343), MISS RAJALAKSHMI(72526).

INSTITUTE OF COST & MANAGEMENT ACCOUNTANTS(U.K).MEMBERSHIP. MAY/JUNE '

FELLOWSHIP: AIYAR V P A (Cochin State Power & Light Corp,Madras), SIVALINGAM K (Ceylon Plywoods Corp,Colombo), SRINIVASAN N S (Bakelite Hylam Ltd, Hyderabad)

ASSOCIATESHIP: BALACHANDRAN K (Michael Shavelson Ltd,London), BALAKRISHNADAS T (Ministry of Defence, Lusaka), CHANDRASEKHARAN N (International Pinchin Johnson,London), NARENTHIRAN A (Blewis & Shaw ( Plastics) Ltd,Kingston-upon-Thames), SEEVARATNAM N(Govt Factory(Engineering) Wellampitiya.Ceylon), SOMASUNDARAM K (Pure Beverages Co Ltd , Colombo), SUNDARAM S (Building Materials Corp,Colombo), VELAYUTHEN M R (Hentley Garments Ltd,Ratmalana,Ceylon)

ROYAL COLLEGE OF OBSTETRICIANS & GYNAECOLOGISTS.MEMBERSHIP EXAMS.MAY '74.

PARATIAN Parsooramen(Mauritius), GNANAPRAGASAM John Baptist(Ceylon), RAMAMURTHI Indira(India).

UNIVERSITY OF SRI LANKA(COLOMBO CAMPUS). FINAL EXAMS IN LAWS.FEB '74.

Total Passed: 38

SECOND CLASS LOWER: MISS S NAVARATNAM, MISS N CHAMMUGARAJAH, MISS P PONNAIYAH,

PASS: MISS F R C AROKIASAMY, MISS S H R CASIPILLAI, MISS S PONNIAH,MISS F S CASSIM, D C CHINNAIYAH, J E R SELLATHAMBU, C SELVARAJAH,L SHANTHIKUMAR, S K THAMBIPILLAY, S BALASUBRAMANIAM, I R E MYLVAGANAM, A RAJASINGHAM.

UNIVERSITY OF SRI LANKA(PERADENIYA CAMPUS).FINAL EXAM IN AGRICULTURE.

Total Passed: 40

SECOND CLASS LOWER: MISS S ARUMUGAM, MISS G CHELLIAH, MISS P K KANAGARATNAM, MISS S KANAPATHIPILLAI, S MAHENDRAN, MISS V V SELVARATNAM, MISS N SIVADASAN.

PASS: E M BALASUBRAMANIAM, MISS S KUMARAKULASINGHAM, V MAHENDRAN, MISS S MAHALEDCHUMY, MISS C MANICKAVASAGAR, S NIRMALANATHAN, MISS V PONNAMBALAM, P RAMANATHAN, SK THARMARAJAH, K THURAIRATNAM.

## A P P O I N T M E N T S

DR S NAVARATNAM MBBS, MRCP,(of Enfield, Middlesex) presently Senior Registrar at the UNIVERSITY COLLEGE HOSPITALS,LONDON, has been appointed as CONSULTANT PHYSICIAN IN RHEUMATOLOGY & REHABILITATION for Basildon & Thurrock District Hospitals, Essex(UK).

MR K ANANDARAJAH M I C E,(of Wimbledon,London SW19) has been promoted as PRINCIPAL OFFICER GRADE ENGINEER with the DEPARTMENT OF THE ENVIRONMENT,LONDON SE1. Mr Anandarajah is the Honorary Manager of the LONDON TAMIL EDUCATIONAL SOCIETY.

MR M SHANMUGAM M I C E,(of Thames Ditton,Surrey) has been promoted as PRINCIPAL OFFICER GRADE ENGINEER with the DEPARTMENT OF THE ENVIRONMENT,LONDON SE1.

MR NITHIYANANDAN RAJADURAI (of Trincomalee,Ceylon) presently Suptdt of Construction, STATE ENGINEERING CORP OF CEYLON has been appointed with the MINISTRY OF WORKS,Kenya.

ஜூலை திங்கள் திறக்கப்படுகின்றது!

# SPICEWAY Ltd.

## Cash & Carry

ORIENTAL & CONTINENTAL GROCERS
256 Battersea Park Road,
LONDON S.W. 11

"மொத்த விற்பனை விலையில் உங்கள்
வீட்டிற்குத் தேவையான சகல
மளிகைப் பொருட்களையும் நாம்
விற்பனை செய்கின்றோம்"

அரிசி, பருப்பு, ஊறுகாய்,
எண்ணெய், சட்னி, தேங்காய்த்
துருவல், மற்றும் சகல பலசரக்குப்
பொருட்களும் இங்கு கிடைக்கும்.

உரிமையாளர்: திரு. ஈ. தாமோதரம்

# NEWSGRAM

## SENTENCES IN CEYLON EXCHANGE FRAUD CASE !

Ahmed Mubarak Thaha described by the Solicitor- General in the opening address as the leading figure in the foreign exchange racket and as a person who ran a private central bank was sentenced on June 6th to seven years rigorous imprisonment and fined Rs 750,000 by the Ceylon Criminal Justice Commission. Raja Ratnagopal, the Ceylon born U K Citizen and businessman was sentenced to 2 years R.I. and fined Rs664,251. The 4th accused George Abeyaratne(Attorney-at-Law) was fined Rs20,000 and a suspended sentence. Kingsley Jackson the second accused a one-time Ceylon Railways engine driver and now a resident in Ealing,London was sentenced to five years in absentia. Violations of the Foreign Exchangelaws bythe four accused totalled over as Rs 16½ million (£700,000approx).

## INDIA COMES OF AGE IN NUCLEAR SCIENCE

The detonation of the Nuclear device with a yield of 15 kilotons in the Thar desert in Rajasthan had marked a significant advance in the field of Nuclear Science in India. The mood of jubilance in India was so widespread that neither **worldwide** polemics over the morality of the Nuclear test nor even the railway strike **dampened** it. Here are some facts and figures of India's Nuclear progress.



*Dr. Ramanna*

*** The man who truly made the Atomic explosion possible is Dr. Raja Ramanna(49), considered as India's top nuclear Scientist, and one of the world's best. He is at present Director of the Bhabha Atomic Research Centre, near Bombay. He has worked on the design and construction of various research reactors in Trombay. He worked on the very first reactor APSARA and the more recent zero energy fast reactor PURNIMA which went critical last May. Quiet, modest and unassuming Dr Ramanna received the Shanti Swarup Bhatnagar Award in 1963 and the Presidential decorations of Padma Bushan in 1973.

*** Immediately after the nuclear explosion, on Saturday,May18, Prime Minister Indira Gandhi accompanied the Chairman ofthe Atomic Energy Commission, Dr Homi Sethna to a press Conference in which Dr Sethna said that the explosion was an experiment to determine the cratoring effect of the earth and the cracking effect on rocks under the soil. He said that Indian Scientists using Indian-made plutonium had carried the the blast 100 meters under the earth.They had flown over the area in helicopters later and detected no significant radiation Dr Sethna added.

*** India now has two Nuclear Power Plants, one at Tarapur near Bombay and another at Rajasthan. The third Nuclear Power Plant is being constructed at Kalpakkam , near Mahabalipuram in Tamilnadu. When all the three Power Plants are on full operational capacity they will generate a total of 1200 megawatts of power.

*** India is world's largest producer of Thorium, having about 80% of the known world reserves. Most of India's Thorium reserves are found along Kerala's coastal areas. When India begins to adapt Plutonium based reactors in the 1980s , Thorium will be converted into Uranium 233 and be used in reactors for power generation.

## UNITED TAMILS SPORTS ASSOCIATION ELECTS NEW COMMITTEE

United Tamils Sports Association(formerly Wimbledon Tamil Union) elected a new committee at a meeting held at Churchill Hall, Wimbledon,London SW19 on 7.6.74.

| | |
|---|---|
| Patron: Sir Stanley Rouse (President F I F A). | Vice-Patron: S Sabapathipillai |
| President: J R Harischandrarajah | Secretary: S D Balarajah |
| Treasurer: S Rudra | Social Secretary: D Paul |
| Ground Secretary: A Ratnagopal | Cricket Captain: W P Vethanayagam |

# NEWS IN BRIEF



*** Ponnuthurai Sivakumar a Tamil Student Leader blacklisted by the Police for Tamil Nationalist activities in North Ceylon died on the 5th of June when captured in Urumpirai, Ceylon by taking his own life. His funeral was observed as a day of mourning all over the Tamil provinces of Ceylon. Over 50,000 Tamils attended the funeral."Sivakumar" is now regarded as the "Bagavath Singh" of the Tamils of Ceylon.

*** T A Mathuram, the leading comedian of the 40s and 50s, and wife of Comedian Late N S Krishnan, died at the age of 56. Her funeral was attended by leading personalities of the Tamil film world.

*** Satyavani Muthu's new party the Thazthappattōr Munnetra Kazhagam(the Depressed Class Progressive Party) has appointed former MP Mr Sivasankaran as its President and Mrs Satyavani Muthu as its General Secretary.

LAKSHMI VISWANATHAN - INDIAN CLASSICAL DANCES

Pretty Lakshmi Viswanathan from Madras, made her appearance for the second time this year, when she was presented at the Purcell Room, Royal Festival Hall London SE1, on Friday May 31st.

Lakshmi devoted herself to carefully chosen dances in Bharatha Natyam style in the first half of the programme. Her apt introductions were very well received by the audience. She excelled very well in the two padam -song dances- especially the one in which she illustrated Krishna playing the flute and Yasoda's sublime love for him . In Thillana her feet movements in rhythms of 3,4,5,7 & 9 beats against the steady 6 beats of the music showed her excellent sense of timing. In the second half of the programme Lakshmi devoted herself to Kuchipudi style dances, with equal charm andversatility.In Bhama Kalapam, where Satyabhama claims her love for Krishna as unequalled and incomparable, and grumbles over the separation; Lakshmi character--ised the role expressively. On the whole, Lakshmi excelled in her versatility and sense of style. Her introductions were very clear, crisp and demonstrative . Lakshmi is at present conducting classes in Bharatha Natyam at the Bharatiya Vidya Bhavan(UK)Centre, 37 New Oxford Street,London WC1.

- Selvan (London).

(Photo in Photonews page)


## CLASSIFIED ADVERTISEMENTS

**RATES: 25p per line, Average 5 Words. Box No. 5p extra. Minimum 50p. Prepayment essential.**

**Educational**

TUITION IN MATHS & SCIENCE SUBJECTS FOR 9-14 YRS BY EXPERIENCED & TRAINED TEACH--ER.CONTACT:01-946 1140.BOX No E4.

**Deaths**

RICHARD CHELVANAYAGAM DANIEL, BAR-AT-LAW (EXECUTIVE OFFICER,HOME OFFICE,LONDON ), OF 136A BALFOUR ROAD, ILFORD, ESSEX(UK) PASSED AWAY ON 16thMAY.FUNERAL 20thMAY .

A APPAVOO('LONDON KOYA') OF 188 BYRON AVENUE,MANOR PARK,LONDON E12,PASSED AWAY ON 6thJUNE.FUNERAL 11thJUNE.ATTENDED BY LARGE GATHERING OF RELATIVES,FRIENDS AND OFFICIALS OF LONDON TAMIL SANGAM.

V SHANKARANARAYANAN(FORMERLY CHIEF ENGNR CALTEX INDIA LTD)FATHER OF MR VENKATA CHALAM,DEPUTY REGISTRAR,BHARATIYA VIDYA BHAVAN UK CENTRE, PASSED AWAY IN BOMBAY.

**Music & Dance**

BHARATHA NATYAM CLASSES BY LAKSHMI VISWA NATHAN AT THE DANCE CENTRE, 12 FLORAL ST LONDON WC2. SATURDAYS 5-6PM.NEAREST TUBE: FOR DETAILS: 01-435 0070.

VIOLIN & GODUVADYAM BY RUDRANI BALAKRISHNAN ACCOMPANIED BY RAMANI ON MRIDANGAM ON FRIDAY 12th JULY 7.30PM AT BHARATIYA VIDYA BHAVAN 37 NEW OXFORD STREET, LONDON W C 1.TICKETS:50p. 01-240 0815.

**Socials**

SUMMER CAMP BY THE ASSOCIATION OF INDIANS IN AMERICA JUNE21st-23rd AT LANOKA HARBOR NEW JERSEY."FUN,FOOD & FRIENDSHIP"AT THE 250 ACRE CAMP WITH SWIMMING & HIKING FACILITIES.APPLY: A I A, 663, FIFTH AVENUE NEW YORK, N Y 10022.

# CLASSIFIED ADVERTISEMENTS

**RATES: 25p per line, Average 5 Words. Box No. 5p extra. Minimum 50p. Prepayment essential.**

## Matrimonial

FAIR VANNIYA-KULA KSHATRIYA GIRL 26,5'2" B.Sc FROM PONDICHERRY SEEKS BRIDEGROOM ABROAD BOX NO 64 c/o LONDON MURASU.

EDUCATED DOMESTICALLY TRAINED IYENGAR GIRL(32YRS) IN WASHINGTON SEEKS SUITABLE MATCH WITH A VIEW TO MATRIMONY . SUB-SECT NO BAR. BOX NO 65

## Marriages

RAJHAGOPALAN(HIGHGATE,LONDON N6)SON OF MR&MRS C SUBRAMANIAPILLAI,RAJAPALAYAM, TAMILNADU. TO PANCHANITHI DAUGHTER OF MRS&LATE MR K RASIAH,KUALA LUMPUR(FORMERLY,URUMPIRAI,JAFFNA)21st APRIL AT IPOH SALAI SRI SUBRAMANIAR TEMPLE.

RAGHAVAN SON OF MR&MRS T K RAMASWAMY KUMBAKONAM TO DHANALAKSHMI DAUGHTER OF MR&MRS P C KRISHNAYYAN,KUMBAKONAM AND MYTHILI DAUGHTER OF MR & MRS T K RAMASWAMY TO DR M R BALAKRISHNAN SON OF M R V V RAMASWAMY IYER(KUMBAKONAM ON 31st MAY AT ARAMANAI BLDGS,KUMBAKONAM.

CHANDRA MOHAN(CHEMICAL ENGNR,WIMBLEDON LONDON SW19) SON OF MR & MRS V NAVARATNAM(FORMER KAYTS MP) TO TILAKAVATHY (MEDICAL OFFICER,GEN HOSPITAL,JAFFNA ) DAUGHTER OF MRS & LATE MR KANAGASABAPATHY.1st JUNE,AT NALLUR,JAFFNA.

VELE(BALHAM,LONDON SW12)SON OF MR&MRS DURMALINGAM(MAURITIUS)TO RANI DAUGHTER OF MRS&LATE MR RAJAGOPAL CHETTY OF MAURITIUS 1st JUNE AT THE RUSSELL HALL,LONDON SW12. ACCORDING TO SAIVA RITES BY HINDU ASSOCN OF G.B.

SEKHAR (COMPTR ENGNR,BOSTON,USA) SON OF MR V S PILLAI(2nd SECY,INDIAN HIGH COMMISSION,LONDON)& LATE MRS PILLAI , TO VIDHYA DAUGHTER OF MR&MRS K T GANAPATHY.2nd JUNE AT KALYANA MAHAL, TIRUNELVELI, TAMILNADU.

MURUGAN SON OF MRS&LATE MR MUNUSAMY , TAIPING,MALAYSIA TO PARVATHI DAUGHTER OF MR&MRS RAJU GOUNDER.2nd JUNE AT SRI MAHA MARIAMMAN TEMPLE,BAGAN SERAI

IN MEMORIAM

MAILVAKANAM MANOHARAN. "THOUGH YOU HAVE GONE YOU WILL ALWAYS LIVE IN OUR HEARTS" INSERTED ON HIS 41st BIRTHDAY-JUNE 20th BY WIFE SARATHA & EVER LOVING CHILDREN NALLUR, JAFFNA.

## LONDON MURASU

SEND A GIFT SUBSCRIPTION TO YOUR RELATIVE, FRIEND,SCHOOL LIBRARY OR LOCAL LIBRARY. SUBSCRIPTIONS TO INDIA,CEYLON, MALAYSIA,SINGAPORE,SOUTH AFRICA,MAURITIUS & FIJI: AIR MAIL £2.75; SEA MAIL £1.80; PLEASE SEND WITH SENDERS DETAILS & CHEQUE/P.O TO LONDON MURASU.

## Socials

ADHEREZ A PARIS TAMIL SANGAM! COTIZATION ANNUELLE: 25FR. CONTACTEZ: LE PRESIDENT PARIS TAMIL SANGAM, D214 R U A, 92160, ANTONY,(FRANCE).

LONDON TAMIL SANGAM- ANNUAL GENERAL MEETING ON SUNDAY, 28th JULY. FOR DETAILS CONTACT: THE SECY,LTS,01-300 9724.

## Films

TAMIL FILM & SOCIAL CLUB,LONDON.PRESENTS
SATURDAY JUNE 29th 7 00PM S A N T H I
SATURDAY JULY 13th 7 00PM RATHA THILAGAM
AT THE CONWAY HLLL,RED LION SQ,LONDONWC1
TICKETS: 01-228 8751;228 1626.

SOUTH AFRICAN TAMIL FILM SOCIETY PRESENTS E N G A L T H A N G A R A J A-COLOUR. FRIDAY JULY 5th 7.30PM AT THE COMMONWEALTH INSTITUTE, LONDON W 8.FOR TICKETS 01 553 3877; 01- 590 4264.

## Music & Dance

CARNATIC MUSIC CLASSES IN LONDON. EXPERT TUITION IN VOCAL GIVEN BY MRS JANAKI VENKATESWARAN,AT 29 STREATHERN RD,WIMBLEDON,LONDON SW19.

## Services

DO PART-TIME BUSINESS! SELL SAREES DOOR TO DOOR. INVESTMENT OF £200 ONLY & GOOD REFERENCES. CONTACT: MR CHAWLA OF SAREE BOUTIQUE,THE BROADWAY MKT,TOOTING,LONDON SW17. PHONE: 01-672 6537.

COACH TRIP & STHALA YATHRAI BY HINDU ASSN OF G.B. TO GEETHA MANDIR TEMPLE, BIRMINGHAM & STOPPING AT STRATFORD UPON AVON. ON SUNDAY 21st JULY.FOR DETAILS CONTACT : A VAIRAVAMOORTHY 01- 540 7710.

## Educational

LONDON TAMIL EDUCATIONAL SOCIETY. TAMIL CLASSES ARE NOW CONDUCTED EVERY SATURDAY 2.00-4.00P.M. AT THE WIMBLEDON COMMUNITY CENTRE HALL,ST GEORGES ROAD,LONDON SW19. ADMISSIONS & DETAILS: VAIRAVAMOORTHY , 01-540 7710; ANANDARAJAH 01-946 8950.

Printed and Published by S. Sabapathipillai, M.A., LL.B.(Lond.), F.R.A.S., F.T.I.I., Bar-at-Law.

for London Murasu Pirasuram, 8 Ashen Grove, London, SW19 8BN.

## For Sarees Visit

# SAREE BOUTIQUE
(IMPEX ENTERPRISES)



E 3,4,5 & 6

The Broadway Market
Tooting Broadway
London SW 17
01- 672 6537

308 London Road
West Croydon
Surrey

LATEST SPECIALITY

NYLON NYLEX 630, 640, 644, and 680.
SILK SAREES, EMBROIDERY SAREES,
LUREX SAREES, CASHMERE SAREES, KANJIVARAM, HAKOBA, etc., etc.

**WIDE SELECTION OF TAMIL AND HINDI RECORDS — AT VERY COMPETITIVE PRICES!**

**HUGE VARIETY OF INDIAN CHAPPALS IN ALL COLOURS AND DESIGNS.**




# AIR CARGO & TRAVEL PLANNERS LTD.

SPECIALISTS IN LOW COST JET TRAVEL

TO: Colombo
Singapore
Kuala Lumpur
Djakarta
Karachi

LONDON - COLOMBO RETURN £165



INSTANT CREDIT

FIVE FLIGHTS PER WEEK

contact: Mr. Pathi

## 10 KINGLY STREET LONDON W 1


Tel ; 01 734 4991/ 9076

Tube; Oxford Circus

# லண்டன் முரசு LONDON MURASU

யாதும் ஊரே... யாவரும் கேளிர்.


# HANDLOOM HOUSE



**New Quality Polyester Georgette**

**Plain Dyed & Printed**

ALL THE PRICES ARE GREATLY REDUCED

Plain and Printed Japanese Nylon Sarees in many varieties

Banarshi Silk Sarees. Printed Kashmiri. Tie and Dye Sarees and many other varieties.

243 TOTTENHAM COURT ROAD
LONDON, W1P 9AD
Tel: 01-580 1771
Underground: Tottenham Court Road and Goodge Street.

35 RUPERT STREET
(off Shaftesbury Avenue)
LONDON, W1V 7FS
Tel: 01-437 4658
Underground: Piccadilly Circus.

44 HIGH ROAD, WILLESDEN ROAD
LONDON, NW10 2QA
Tel: 01-459 7910
Underground: Willesden Green.


**Edition mensuelle internationale en Tamoule** Publiée à Londres

**International Tamil Monthly Magazine** Published from London

In London herausgegebene **internationale tamulische Monatsschrift**